விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 24 செவ்வாய்க்கிழமை (10.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

### மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி இன்று

# வடக்கு அமர்வில் விசேட பிரேரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு உட்பட வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்திருக்கின்ற பொதுமக்கள் அவர்களுடைய சொந்த நிலத்தில் மீள்குடியேற்றப்படுவதுடன் அவர்களுடைய உடைமைகள் மற்றும் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இன்று நடைபெறவுள்ள மாகாண சபையின் அமர்வில் விசேட பிரேரணை கொண்டுவருவதற்கு ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

### அகாஷி– மகிந்த முக்கிய சந்திப்பு



(கொழும்பு) இலங்கைக்கு பயணத்தை மேற்கொண்டுள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று 20-ம் பக்கம் பார்க்க

இன்று ஆரம்பமாகும்
க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
வலம்புரி கல்விப்பிரிவு

## தமிழர் ஒருவரே ஆளுநர்; வலியுறுத்தும் பிரேரணை இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழர்ஒருவரை முதலமைச்சர்சிவிவிக்னேஸ்வரனின் ஆலோசனையுடன் ஆளுநராக நியமிக்க வேண்டும்என்று வலியுறுத்தும் பிரேரணை உட்பட 8 பிரேரணைகள் இன்று நடைபெறும மாகாணசபையின் அமர்வின் போது ஆளும்கட்சியினரால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது.

வடக்கு மாகாணசபையின்முதலாவது பேரவையின் மூன்றாவது கூட்டத்தொடர் இன்று காலை யாழ். கைதடியிலுள்ள மாகாணசபையின கட்டடத்தில் அவைத்தலைவர்சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த அமர்வில் ஆளும்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் சிவில் ஆளுநர் நியமனத்தை கோரும்பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

வடக்கு மாகாணசபையின் ஆளுநராக தற்பொழுதுள்ளவர் முன்னர் இராணுவத்தில் பணிபுரிந்தவர் என்பதனால் அவரைமாற்றி சிவில் நிர்வாகம் சார்ந்த ஒருவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்று கடந்தஅமர்வில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று நடைபெறும் அமர்விலும் ஆளுநர் மாற்றத்தை 20-ம் பக்கம் பார்க்க

### நெல்சன் மண்டேலாவுக்கு இறுதி அஞ்சலி

# தென்னாபிரிக்காவுக்கு மகிந்த பயணமானார்

(பிரிட்டேரியா)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும்நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்கா, பிரிட்டோரியாவுக்கு நேற்றிரவு பயணமானார்.

ஜனாதிபதி இன்று 10 ஆம் திகதி மறைந்த நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்துவார் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 5ஆம் திகதி இரவு காலமான நெல்சன் மண்டேலாவின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி, அவர் பிறந்து வளர்ந்த கிராமமான குனு என்ற இடத்தில் இடம் பெறவுள்ளது. நெல்சன் மண்டேலாவுக்கு இறுதி 20-ம் பக்கம் பார்க்க

# உருத்திரகுமாரன் மீண்டும் தேர்வு



(ரொரன்டோ)

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தன் இரண்டாம் தவணைக் காலத்தின பிரதமராக வி.உருத்திரகுமாரன் ஏகமனதாக மீண்டும்தேர்வு செய்யப்பட்டுளளார்.

கடந்த 6,7,8-ம் திகதிகளில் அமெரிக்காவின் நியூ ஜேர்சியிலும், துணையாக சூரிச்சிலும் இடம்பெற்றிருநத நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாம் தவணைக் காலத்துக்கான முதலாவது அரசவை அமர்விலேயே ஏகமனதாக வி.உருத்திரகுமாரன், பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அரங்கு நிறைந்த கரவொலியோடும், உலகத் தமிழர்களது வாழத்துக்களோடும் பிரதமர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு ஏற்புரையினை வழங்கிய வி.உருத்திரகுமாரன்,

2002-ம் ஆண்டு தமிழ் தேசிய இனத்தின் உணர்ச்சியின் பிரதிபலிபபான, எழுச்சியின் வடிவமான தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களின் போராடும் ஆற்றலினையும், பேரம்பேசும திறத்தினையும், மக்களையும் தேசததினையும் நிர்வகிக்கும தகைமை எனும் தலை 20-ம் பக்கம் பார்க்க

# வடக்கின் முதலாவது பட்ஜெட்டை இன்று சமர்ப்பிக்கிறார் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் முதலாவது வரவு செலவுத் திட்டம் (பட்ஜெட் 2014) முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணசபையின் முதலாவது பேரவையின் மூன்றாவது கூட்டத்தொடர் இன்று யாழ்.கைதடியிலுள்ள மாகாணசபையின் கட்டடத்தில அவைத்தலைவர்சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போதே வடக்கு மாகாண சபையின் முதலாவதும், 2014ஆம் ஆண்டுக்குமான வரவு-செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்து அங்கீகாரத்தை முதலமைச்சர் பெறவுள்ளார்.

இதேவேளைவிசேட உரையினையும் முதலமைச்சர்ஆற்றவுள்ளார் எனவும் வரவு 20-ம் பக்கம் பார்க்க

# குடைசாய்ந்து பேருந்து விபத்து ; 35 பேர் காயம்

(மாங்குளம்)

மாங்குளம் பனிக்கம்குளம் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவல் இடம்பெற்ற பேருந்து விபத்தில 35க்கும்அதிகமானோர்காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா விலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற இலங்கை போக்கு வரத்துச் சபையின் காரை நகர் சாலைக்குச் சொந்தமான பேருந்தே வேகக்கட்டுப்பாட்டை இழந்து பனிக்கம்குளம் வளைவொன்றில் குடைசாய்ந்ததில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.



இதன்காரணமாக பேருந்து பெரும் சேதம் அடைநததுடன் பேருந்தில் பயணித்த மக்களும் பேருந்தினுள் சிக்குண்ட நிலையில் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மற்றும் மாங்குளம் வைத்திய சாலைகளில் அனுமதிக கப்பட்டுள்ளனர். 20-ம் பக்கம் பார்க்க

## மனிதவுரிமைகள் தினமான இன்று யாழிலிருந்து ஐ.நாவிற்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தகாலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக் கூறல் அவசியம் என்பதை வலிறுத்தி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மகஜர் ஒன்று சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம் பிள்ளை அம்மையாருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள அந்த மகஜரில் இலங்கையில் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு நான்கு ஆணடுகளைக்கடந்த நிலையில் சிறையிலுள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்ய வேண்டும்.

யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு 20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 6 பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக வடக்கில் முறைப்பாடு

வட மாகாணத்திலுள்ள ஆறு பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என வட மாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வட மாகாண தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் பணிப்பாளர் கே.தியாகராஜா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நெல்லியடி, அச்சுவேலி, மானிப்பாய், கனகராயன் குளம், வவுனியா, நம்பைக் குளம் ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு எதிராகவே இந்த முறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் பொது மக்களில் ஒரு சிலர் தமது பிரச்சினைகளை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளாக மேற்கொண்டுள்ளனர்.

இருந்த போதும் எந்த விதமான நடவடிக்கைகளையும் பொலிஸ் நிலையத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டிலேயே குறித்த பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இதில் 2 பொலிஸ் நிலையங்களிற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் மிகுதி நான்கு பொலிஸ் நிலையங்களில் இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் தங்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அம்முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸ் நிலையத்திலுள்ள பொலிஸார் நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் அது தொடர்பான தங்களின் முறைப்பாடுகளை பொதுமக்கள் நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ யாழ்.கச்சேரியில் அமைந்துள்ள வட மாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகத்தில் அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# பெண்களை அடக்கி ஆளும் காலம் மலையேறிவிட்டது

## நீதிபதி கணேசராஜா தெரிவிப்பு

பெண்கள் அடங்கியொடுங்கி இருக்காது தமக்கு எதிராக இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு எதிராக கிளர்ந்தெழும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ளல் வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் 7-ம் திகதி முல்லைத்தீவு பெண்கள் அமைப்பினர் ஏனைய மாவட்டங்களில் உள்ள பெண்களுடன் இணைந்து நடத்திய பேரணியின் பின்னர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக்களைய ஒத்துழைப்பு நல்க வேண்டுமென தெரிவிக்கப்பட்ட மகஜரினை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மற்றும் சிறுவர், பெண்கள் தொடர்பான பிரிவுக்கான பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு மகஜர் ஒன்றை கையளித்ததன் பின்னர் நடைபெற்ற கூட்டத்தின்போது நீதிபதி மேற்படி கருத்தினை தெரிவித்தார்.

சட்டங்கள் போதுமானளவு இருந்தாலும் அதனை அமுல்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளதாக குறிப்பிட்ட நீதிபதி வடக்கு கிழக்குக்கு வெளியே அமைக்கப்பட்ட சிறுவர், பெண்கள் தொடர்பான விசேட நீதிமன்றங்கள் வடக்கு, கிழக்கிலும் அமையப்பெறவுள்ளதாகவும் நீதிமன்ற கட்டமைப்பும் சட்டங்களும் பெண்களை பாதுகாப்பதற்கான அனைத்து வழிமுறைகளையும் கொண்டிருந்த போதிலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கு நீதிமன்ற கட்டமைப்புகளையும் சட்டங்களையும் சரிவர பயன்படுத்த வேண்டுமெனவும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். (செ)



## வடமராட்சி பகுதியில் இரு விபத்து; 4 பேர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி பகுதியில் இடம்பெற்ற இரு வெவ்வேறு விபத்துக்களில் படுகாயமடைந்த நால்வர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 7 மணியளவில் நெல்லியடி அரசடி சந்தியில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி, கன்ரர் வாகன விபத்தில் ஆட்டோ சாரதி உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கரவெட்டி மேற்கு பகுதியை சேர்ந்த ஆட்டோ சாரதியான ஆண்டி சுந்தரம்(வயது 60) மற்றும் ஆட்டோவில் பயணித்தவர்களான துன்னாலை தெற்கு கரவெட்டியை சேர்ந்த இளையதம்பி அப்புத்துரை( வயது 80) அப்புத்துரை சோதிமலர்(வயது 63) என்ற மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

மணலை ஏற்றி வந்த கன்ரருடனே மேற்படி முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இமையாணன் புறாப்பொறுக்கி பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் உடுப்பிட்டி கொம்பன்துறை பகுதியை சேர்ந்த வன்னி அக்கராயன் மகா வித்தியாலய ஆசிரியரான இ.ராகவன் (வயது 24) என்பவரும் படுகாயமடைந்துள்ளார். (செ-10,24,74)

# தமிழ்ச் சங்கத்தின் பாரதி விழா

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் நடத்தும் பாரதி விழா நாளை 11-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு யாழ்ப்பாண தமிழ்ச் சங்க உப தலைவர் மா.சின்னத்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் வரவேற்புரையினை யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன், தொடக்க உரையினை யாழ்ப்பாண தமிழ் சங்கத் தலைவர் தி.வேல்நம்பி, வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்புரையினை பாரதியார் என்ற பொருளில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர். அத்தோடு தமிழ் சங்கத்திற்கான இணையத்தளத்தினை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் ஆரம்பித்து வைக்க, அறிமுக உரையை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப்பதிவாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்துவார். (செ)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு அரசு நடத்தும் நாடகம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

அரசாங்கம் தன் மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவை பயன்படுத்தி வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நாடாளுமன்ற தெரிவுக்குழு அரசாங்கம் நடத்தும் நாடகம்.

அத்துடன் இந்த தெரிவுக்குழு பிரச்சினைக்கு தீர்வை வழங்காமல் காலத்தை வீணடிக்கும் மற்றுமொரு தெரிவுக்குழு மட்டுமே. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களையும் யோசனைகளையும் அந்த தெரிவுக்குழு விடம் முன்வைப்பதில் அர்த்தமில்லை.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இணக்கப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழு கலந்துரையாடல்களை ஆரம்பித்ததால் மட்டுமே அதில் கலந்து கொள்வதா? யோசனைகளை முன்வைப்பதா? என்பது பற்றி கூட்டமைப்பு ஆராய்ந்து பார்க்கும். எவ்வாறாயினும் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் பங்கேற்பதில்லை என்று முடிவு செய்துள்ளது. என்றாலும் எமது யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவுக் குழுவில் முன் வைத்தாலும் எமது யோசனைகளில் குறைந்தது ஒன்றை [illegible] என்றார். (செ-11)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் 2-ம் நாள் விழா



இரண்டாம் நாள் விழா இது
இவ் இறைவனிற்கு
ஈடு இணை ஏது?
இன்பங்கள் தந்து
துன்பங்கள் நீக்கும் தூய
பரம் பொருள் எம் தலைவன்.
அவன் தலைவி சௌந்தராம்
பிகையோடு மார்கழி நீராடி
மகாபாவங்களை நீக்கி
பாரெல்லாம் பரஞ்சோதியாக
விளங்கும் அவன்
ஈடிணையற்ற பாதங்கள்
என்றும் போற்றுவோம்.
காரை. S. கெங்காதரன்

அனுசரணை
எஸ்.பீ.என் மோட்டர்ஸ்
145, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 0212229484
(C-5728)

# பெற்றோல் அருந்திய பாலகி மரணம்

பிளாஸ்டிக் போத்தல் ஒன்றில் எஞ்சியிருந்த பெற்றோலை அருந்திய ஒன்றரை வயது குழந்தை ஒன்று உயிரிழந்த சம்பவம் பதுளை ஸ்பிரிங்வெளி தோட்டத்தின் மீமலை பிரிவில் நடந்துள்ளது.

சம்பவத்தில் ஜோதிராஜ் விஜி என்ற பெண் குழந்தையே உயிரிழ ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளுக்கு பயன்படுத்துவதற்காக குழந்தையின் தந்தை வாங்கி வந்த பெற்றோலை அவர் வண்டிக்கு பயன்படுத்திய பின்னர் போத்தலை முற்றத்தில் வீசி எறிந்துள்ளார்.

சகோதரனுடன் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை போத்தலில் இருந்த பெற்றோலை அருந்தியுள்ளது.

குழந்தை வாந்தி எடுத்ததால் உடனடியாக தோட்டத்தில் உள்ள [illegible] செல்லப்பட்ட போதிலும் குழந்தை ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக மருத் துவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (செ-11)

உடனடியான தொழில்

வருமான பிரச்சினையா ??? தொழில் தேடுகிறீர்களா ??? கவலையை விடுங்கள் ...... 18-55 ஆண், பெண்

எம்மிடம் கொழும்பை அண்மித்த பகுதிகளின் பிரபல்யமான தொழிற்சாலைகளான டொபி/ ஜாம்/ கோடியல்/ பிஸ்கட்/ PVC/ பிளாஸ்டிக்பை/ கோழி இறைச்சி போன்ற தொழிற்சாலைகளில். உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18,000/-, 25,000 /- , 38,000 /- சம்பளங்களுடன் உற்பத்தி / லேபல் / பொதியிடல் / களஞ்சியப்படுத்தல் பிரிவுகளில் நிரந்தர உடனடி வேலைவாய்ப்பு.

0777 117 661, 0775561883 (C-5729)

பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்
• பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே • மசாலா தோசை 120/- மட்டுமே
தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829 (சி-5727)

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-5725)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நெல்லியடி சந்தைக்கு 57 மில்லியன் ஒதுக்கீடு

நெல்லியடி சந்தை நவீன சந்தையாக மாற்றுவதற்கு புற நெகும திட்டத்தினூடாக 57 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டங்கள் கர வெட்டி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்படும் இச் சந்தை 2 மாடிகளையும் 67 கடைகளையும் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இந் நிலையில் சந்தையின் வேலைத் திட்டங்களை துரித கதியில் ஆரம்பிக்குமாறும் வேலைத்திட்டங்கள் யாவும் அடுத்தாண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியுடன் முடிவடைய வேண்டுமெனவும் நேற்றைய பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-9-60)




# நாவலடி பாலத்தை புனரமைக்குக

(கரவெட்டி)

அல்வாய் நாவலடி பாலம் சேதமடைந்து ஒரு வருடம் கடந்துள்ள போதிலும் இதுவரை புனரமைப்புச்செய்யப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் பாரவூர்த்தியொன்று இப் பாலத்தினூடாக சென்ற சமயம் குறித்த பாலத்தின் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்தது.

இந்நிலையில் சேதமடைந்த குறித்த பகுதி புனரமைப்புச் செய்யப்படாததினால் பாலம் மிக மோசமானளவு சேதமடைந்துள்ளது.

இவ்வாறாக சேதமடைந்துள்ள பாலத்தினூடாக சிறியரக வாகனங்களே (இரண்டு சில்லு) பயணிக்கக் கூடியதாகவுள்ளது.

இதனால் ஏனைய வாகனங்கள் பருத்தித் துறை மாலு சந்தி வீதியால் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றன.

அத்தோடு, இப்பாலத்தினூடாக மழைநீர் வழிந்தோடுவது வழமை. ஆயினும், தற்போது பாலம் சேதமடைந்துள்ளதால் மழை நீரும் வழிந்தோட முடியவில்லை.

எனவே, நாவலடிப் பாலத்தில் எஞ்சியுள்ள சிறிய பகுதியும் சேதமடைய முன்னர் சம்பந்தப்பட்டோர் பாலத்தைப் புனரமைப்புச் செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-24)




## வீதியை புனரமைக்குக

பருத்தித்துறை கற்கோவளம் பாடசாலை வீதி சுமார் 15 வருடங்களுக்கு மேல் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட வீதி பருத்தித்துறைப் பிரதேச சபையின் எல்லைக்குள் காணப்படுகின்றது. புனரமைப்புச்செய்யப்படாமையினால் குண்டும் குழியுமாகவுள்ள இவ் வீதியை கடற்றொழிலாளர்கள், பிரதேச மக்கள், மாணவர்கள் எனப் பலரும் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, சேதமடைந்துள்ள பாடசாலை வீதியினை சம்பந்தப்பட்டோர் புனரமைத்துத்தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-19)

# பெண்கள் மீதான வன்முறைகளை நிறுத்தக் கோரி கண்டன பேரணி

## அதிகளவானோர் பங்கேற்பு




(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெண்கள் மீது ஏற்படுத்தப்படும் கொடுமைகளைக் கண்டித்தும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கோரியும் மாபெரும் கண்டனப் பேரணியும் பிரசார நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்படும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைக்கான நீதி கோரும் பிரசாரம் என்னும் தொனிப்பொருளிலான நிகழ்வு நேற்று முற்பகல் 7.30 மணியளவில் முகாமாலைச் சந்தியிலிருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமாகி யாழ்.நீதிமன்றத்தை அண்மித்த பகுதியில் ஏ-9 வீதியில் இக் கண்டன கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து யாழ்.நீதிமன்றத்திலிருந்து எதிர்ப்பு பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 500 இற்கும் மேற்பட்டோர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப் பாணக் கல்லூரி வரை பேரணியாக சென்றனர்.

யாழ்.மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பதாகைகளையும் பாலியல் துன்புறுத்தல்களுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பெண்களின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் தாங்கியவாறு எதிர்ப்பு கோசங்களுடனும் இந்தப் பேரணி இடம்பெற்றது.

கைக் குழந்தைகளுடனும் சிறுமிகளுடனும் இந்தப் பேரணியில் பல குடும்பப் பெண்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி தண்டிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட பின்பு படுகொலை செய்யப்பட்ட லோகராணி, மைதிலி ஆகியோரின் படுகொலைகளுக்கு எதிராக அதிகளவான பதாகைகளைத் தாங்கி நின்றனர்.

அத்தோடு எதிர்காலத்தில் இவ்வாறான கொடுமைகள் இடம்பெறக்கூடாது என்ற விடயமும் இந்தப் பேரணியின் போது அதிகளவில் வலியுறுத்தப்பட்டது. (அ-6)

## வடிவமைப்பு உற்பத்தி தொடர்பான பயிற்சி

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் அலங்கார ஆபரணங்கள் வடிவமைப்பு, உற்பத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறையானது நாளை மறுதினம் வியாழக்கிழமை, மறுநாள் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் யாழ். பொது நூலக மண்டபத்தில் துறைசார் தேர்ச்சி பெற்ற வளவாளரினால் நடத்தப்படவுள்ளது.


இப்பயிற்சிப்பட்டறையில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ள முடிவதுடன் கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஆர்வமுள்ளவர்கள், பாடசாலையில் இருந்து விலகியோர் பங்குகொள்ளவுள்ளனர்.

இப் பயிற்ச்சிப் பட்டறை தொடர்பான மேலதிக விபரங்களை 021 222 2421 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (அ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனத்தினால் யுத்தத்திற்கு பின்னரான அரசியல் முன்னேற்றம் எனும் தலைப்பிலான கருத்தரங்கொன்று நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கு தேசிய சமாதான பேரவையைச் சேர்ந்த ஜோன் பெரேரா தலைமையில் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டவரின் பாரியார் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நம்பிக்கை

"அந்த ஆள் ரொம்ப நல்லவன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். கடைசி நேரத்தில் இப்படிக் காலை வாரி விட்டானே" என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் உண்டு.

ஒருத்தனை 'நல்லவன்' என்று நாம் நம்பிக் கொண்டிருக்கும் போது அவன் வேறு விதமாக நடந்து கொண்டாள். நமக்கு மிகவும் கஷ்டமாகும்.

அதே மாதிரி குறை நம்மிடமும் உண்டு. இந்த உலகத்தில் எதையும் நல்லவிதமாக எடுத்துக் கொள்பவர்களும் உண்டு. கெட்டவிதமாக எடுத்துக் கொள்பவர்களும் உண்டு.

நீங்கள் எந்தக் கலர்க் கண்ணாடியை மாட்டியிருக் கிறீர்களோ அதே கலராகத்தான் இந்த உலகமும் தெரியும் என்று சொல்கிறார்களல்லவா, அது இதைத்தான். புத்தருடைய சீடர் ஒருத்தர் இருந்தார்.

அந்த புத்தபிக்கு தீட்சை வாங்கிக் கொண்டு தர்ம பிரசாரத்துக்காக வெளியூர் புறப்படுவதற்காக இருந்தார். அந்த நேரத்தில் புத்தர் அந்த சீடரைக் கூப்பிட்டு விசா ரித்தார்.

"நீ எந்தப் பிரதேசத்தில் தர்ம யாத்திரை செய்யப் போகிறாய்?" என்றார்.

"சுவாமி நான் சூனா பராந்தகம் என்னும் பிரதேசத்தில் தர்ம பிரசாரம் செய்யப்போகிறேன்" என்றார் அவர்.

"அந்தப் பகுதியில் ஜனங்கள் உன்னை திட்டினால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

"நான் சந்தோஷப்படுவேன்" என்றார் அவர்.

"ஏன்?" என்று கேட்டார் புத்தர்.

"நல்லவேளை, அவர்கள் திட்டுவதோடு விட்டார்களே. அடிக்கவில்லையே. அதனால் அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று நினைப்பேன்" என்றார்.

"சரி, அவர்கள் உன்னை அடிக்கிறார்கள் என்று வைத்துக் கொள். அப்பொழுது நீ என்ன செய்வாய்?" என்றார்.

"அடடா, இவர்கள் எவ்வளவு நல்லவர்கள், ஆயதத்தால் தாக்காமல் இப்படி வெறும் கையால் அடிப்பதோடு நிறுத்தி விட்டார்களே... என்று நினைத்து சந்தோஷப்படுவேன்" என்றார்.

"சரி, ஆயுதத்தாலேயே உன்னை தாக்கி விட்டார்கள் என்று வைத்துக் கொள். அப்பொழுது என்ன நினைப்பாய்?" என்று கேட்டார்.

"ஆகா! இவர்கள் எவ்வளவு நல்லவர்களாக இருக்கிறார்கள். பிறவி என்ற தளையிலிருந்து விடுபட இந்த உலகில் ஒவ்வொருவரும் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் மிகவும் சுலபமாக முத்தியடைவதற்கு இவர்கள் உதவி செய்கிறார்களே. இவர்களை எவ்வளவு போற்றினாலும் போதாது என்று நினைத்து சந்தோஷப் படுவேன்." என்றார் அந்த சீடர்.

உடனே புத்தர் பார்த்தார். அந்த சீடரை மனப்பூர்வமாக வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். இப்பொழுது அந்தச் சீடரின் மனோநிலையை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

அவருடைய பார்வையில் இந்த உலகத்தில் எல்லோருமே நல்லவர்கள் தான். அந்த அளவுக்கு அவருக்கு பக்குவம் ஏற்பட்டுவிட்டது.

சிலருடைய பார்வை வேறு மாதிரி இருக்கும். அடுத்தவர்கள் நல்லது செய்தால் கூட அதை இவர்களுக்கு நல்ல விதமாக எடுத்துக் கொள்ளத் தெரியாது.

ஒரு பெரிய மனிதன் இருந்தார். அவருக்கு தெரிந்த ஒருத்தர் ஒரு நாள் அவரைத் தேடி வந்தார். "ஒரு 50 ரூபா இருந்தால் கொடுங்கள்; அடுத்த திங்கட்கிழமை திருப்பிக் கொடுத்து விடுகிறேன்." என்றார்.

அவர் திருப்பிக் கொடுப்பார் என்று இவருக்கு நம்பிக்கை இல்லை. இருந்தாலும் கொடுத்தார்.

ஆனால், அந்த ஆள் சொன்னபடியே சரியாக அடுத்த திங்கட்கிழமை திரும்பி வந்தார். 50 ரூபா பணத்தை சொன்னபடியே திருப்பிக் கொடுத்து விட்டுப்போனார்.

ஒரு மாதம் கழித்து அதே ஆள் மறுபடியும் இவரிடம் வந்தார். "ஐயா, ஒரு 50 ரூபா கடன் வேண்டும்" என்றார்.

அந்த பெரிய மனிதன் பார்த்தார்; "உன்னை நம்பிப் பணம் கொடுக்க முடியாது போ" என்று கோபத்துடன் சொன்னார்.

"என்னங்க இது? போன தடவை கூட சொன்னபடி சொன்ன நாளில் பணத்தை திருப்பிக் கொடுத்தேனே. என்னை நம்ப முடியாது என்று சொல்கிறீர்களே!" என்றார்.

"ஆமாம், போன தடவை உன்னிடம் நான் பணம் கொடுத்த போது அதை நீ திருப்பிக் கொடுக்க மாட்டாய் என்று மனப்பூர்வமாக நம்பினேன். ஆனால் நீ அந்த நம்பிக்கையை பொய்யாக்கி விட்டாய். என் நம்பிக்கையை நாசமாக்கிய உன்னை மறுபடியும் எப்படி நம்புவது? போய் வா" என்று சொல்லிவிட்டார். இப்படி ஒரு நிலமை வந்து விடக்கூடாது என்பதற்கு தான் இந்தக் காலத்தில் பலர். ஒருத் தரிடம் ஒரு தடவை கடன் வாங்கி விட்டால் அடுத்த தடவை அவர் முகத்தில் முழிப்பதேயில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அடிதடி, கொள்ளைச் சம்பவங்கள் புலனாய்வு பிரிவினரின் கவனத்துக்கு

## யாழ். பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற அடிதடி மற்றும் கொள்ளைச் சம்பங்கள் என்பன இனி வரும் காலங்களில் புலனாய்வுப்பிரிவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவங்களின்பின்னணியை அறிவதற்காகவே இவை புலனாய்வுப் பிரிவினரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படவுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடுவில் கற்பகப் பிள்ளையார் கோவிலடி தோட்ட வெளியில் உள்ள வீடொன்றில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளை முயற்சியின் போது கொள்ளையர்களின் கோடரி வெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்த யாழ். இந்துக்கல்லூரியின் க.பொ.த. உயர்தர உயிரியல் பிரிவு (2012) ச.யதுசன் (வயது 20) என்ற அப்பாவி மாணவன் கொல்லப்பட்டார்.

இதில் வீட்டிலிருந்த அனைவரும் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்துமிருந்தனர். இவ்வாறு மனிதத் தன்மையே இல்லாத ஈவிரக்கமற்ற செயல்கள்யாழ்ப்பாணத்தில்ஆங்காங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஏதுமறியாத அப்பாவி மாணவன் கொள்ளையர்களின் தாக்குதலில் உயிரிழப்பதை நாம் சாதாரணமாக கருத முடியாது. யாழ்ப்பாணத்தில்நாளாந்தம் இடம்பெறுகின்ற வன் முறைச் சம்பவங்களால் இங்கு ஒருவித பதற்ற நிலை ஏற்படுத்தப்படுவது போல்தெரிகின்றது.

ஆகவே, இனி யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற வன்முறைகள், அடிதடிகள், குழு மோதல்கள், கொள்ளைச் சம்பவங்கள் பொலிஸாரின் விசாரணையுடன் மட்டும் முடிவுறாது.

இவை அனைத்தும் புல னாய்வுப் பிரிவின்கவனத்திற்குகொண்டு வரப்பட்டு உரியகுற்றவாளிகள் கண்டறியப்படும்வரை புலனாய்வுவிசாரணைகள்தொடரும்.

இதேவேளை யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் சில இளைஞர் குழுக்கள்தமக்கெனஒருகுழுவை வைத்திருந்து இவ்வாறான அடிதடியில் ஈடுபடுகின்ற போதிலும் அக்குழுக்கள் பொலிஸாரால் கைது செய்யப்படுவதில்லை.

இவ்வாறான இளைஞர் குழுக்கள் தொடர்பில் புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு அவர்கள் அனைவரையும் கைது செய்துசட்டத்தின்முன் நிறுத்துவதன்மூலம்யாழ்ப்பாணத்தை அமைதியடையச் செய்ய முடியும்.

இவ்வாறானவர்களுக்கு நீதி பரிபாலனமும்உயர்ந்தபட்சதண்டனைவழங்க வேண்டும்எனசமூகஆர்வலர்களினால் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் இனியும்மௌனமாக விருந்தால் யாழ்.மண்ணில் இன்னும் எத்தனையோஅப்பாவிஉயிர்கள்மனிதபண்பற்றமிருகங்களினால்காவுகொள்ளப்படும் என்பதோடு யாழ்.மண் அமைதியை இழக்கும் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. (அ-4)

# வடமராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

வடமராட்சி வலயத்தில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி கல்வி வலயத்திலுள்ள யா. கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் தரம் II, யா.கேவில் அ.த.க. பாடசாலை தரம் III ஆகிய பாடசாலைகளிலே அதிபர் வெற்றிடங்கள் உள்ளன.

அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தரம் II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவையில் தரம் 2-IIஇற்கு மேற்பட்ட தரமுடையவர்களும் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-Iஇற்கும் மேற்பட்ட தரமுடையவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

தரம்-II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவையில் தரம்1-I இற்கு மேற்பட்ட தரமுடையவர்களும் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு, இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபர் கடமை யாற்றாதவர்களும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி வடமராட்சி வலயத்துக்குட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவராகவும் தற்போது கடமையாற்றும் பாடசாலைகளில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக சேவையினை ஆற்றியிருப்பதோடு ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராகவும்இருக்கவேண்டும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்று, எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும்.

இப் பதவிக்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70-110 | 100-120 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 50-70 | 70 | 70 | 80 |
| தக்காளி | 25-30 | 30 | 40 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 20-35 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 20 | 40 | 40 |
| கரட் | 40 | 40 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 | 50 |
| புடோல் | 20 | 40 | 25 | 40 |
| வாழைக்காய் | 35 | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90-220 | 200 | 230 | 200 |
| பெரிய வெங்காயம் | 70-105 | 160 | 130 | 120 |
| பாகற்காய் | 70 | 80 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 20 | 40 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 | 50 |
| பயற்றங்காய் | 80-110 | 80 | 100 | 120 |
| லீக்ஸ் | 60 | 90 | 90 | 80 |
| பீற்றூட் | — | 40 | 30 | 50 |
| கறிமிளகாய் | -- | 120 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 80-140 | 60 | - | 160 |
| போஞ்சி | 110 | 100 | 140 | 160 |
| கீரை - 1 பிடி | 10-20 | 40 | 25 | 30 |
| தேசிக்காய் | 80-120 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 30 | 35-45 |
| இராசவள்ளி | 180-220 | 180 | - | 240 |

## இராசி பலன்

10.12.2013
(கார்த்திகை 24, செவ்வாய்க்கிழமை )
சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு
அட்டமி பிற்பகல் 1.43 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 7.14 மணிவரை
இராகுகாலம் 3.19-4.49 மணிவரை
சுபநேரம் 10.49-12.19 மணிவரை
அட்டமி - நவமி

**மேடம்** காரிய அலைச்சல்கள் கூடும். சயன சுபக்குறைவான நாள். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட முற்படுவீர்கள். தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும். கௌரவமான நாள்.

**மிதுனம்** தொட்ட காரியம் வெற்றிபெறும் நாள். அரசு வழியில் அனுகூலம் உண்டு. உறவினர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும். வருமானம் வரும் வழியை கண்டுகொள்வீர்கள்.

**கடகம்** புகழ் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம். முன்னேற்ற காரியத்துக்கு முயற்சி எடுப்பீர்கள். மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும். பயனாளிகளால் பலனுண்டு.

**சிங்கம்** விரயங்கள் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும்போது விழிப்புணர்வு அவசியம். குடும்பத்தில் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம். போசன சுகமுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள். பெண்களின் சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகும். பயணத்தால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம். செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம். புண்ணிய காரியங்களுக்கான செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும். சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும். புதிய திட்டங்கள் கைகூடும். விருந்துகளில் கலந்து கொள்ளும் அழைப்புகள் வந்து சேரலாம். பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும். தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். மனதில் இனம் புரியாத சிந்தனைகள் குடிகொள்ளும். வாகன சுகமுண்டு. உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் சகோதர வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும். அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும். தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்** எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள். நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும். பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம். வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக முடிவடையும். திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம். கற்பனை மிகுதியான நாள். பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வரும் இந்திய பிரதமர் முஸ்லிம் பகுதிகளுக்கும் வரவேண்டும்

## யாழ். முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் வரவிருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் யாழ். முஸ்லிம் பகுதிகளுக்கும் வரவேண்டும் என யாழ். மாவட்ட முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தமது கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்திற்குப் பின்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் மக்களையும் பார்வை இடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ மூன், மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, ஐரோப்பிய நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜப்பான் நாட்டு விசேட தூதுவர் யசூசி அகாசி ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து தமிழ் பிரதேங்களையும் தமிழ் மக்களையும் நேரில் கண்டு அவர்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் கேட்டறிந்துள்ளனர்.

ஆனால் இவர்கள் அனைவரும் முஸ்லிம் பகுதிகளுக்கு வரவும் இல்லை. முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள், தேவைகளை கேட்டறியவும் இல்லை என்பது கவலைக்குரிய விடயமே.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டு தமிழ் மக்களை நேரடியாக சந்தித்திருந்தார். ஆனால், யாழ். முஸ்லிம் பகுதிகளுக்கு விஜயம் செய்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களையோ முஸ்லிம் மக்களையோ சந்திக்கவில்லை.

ஆகவே, யாழ்ப்பாணம் வரவிருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். முஸ்லிம் பகுதிகளுக்கு விஜயம் செய்து இடங்களைப் பார்வை இடுவதுடன் முஸ்லிம் மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் கேட்டறிய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடமாகாண சபை முதலமைச்சர் யாழ். முஸ்லிம் பகுதிகளுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விஜயம் செய்வதற்கு நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதுடன் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# இரு சந்தேக நபர்களுக்கு பரீட்சை எழுத அனுமதி

(கொழும்பு)

செங்கலடி இரட்டைக் கொலை வழக்கின் இரு சந்தேக நபர்களை இன்று நடைபெறும் க.பொ.த.பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி ஆர்.எப்.றியாழ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவர்கள் இருவரது சார்பிலும் சிரேஷ்ட சட்டத்தரணி பேரின்பம் பிரேம்நாத் சமர்ப்பித்த மனுவின் பேரில் இவ்வுத்தரவிடப்பட்டது.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி செங்கலடி வர்த்தக தம்பதியரான சி.ரகு, அவரின் மனைவி சு.விப்ரா ஆகிய இருவரும் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

இக் கொலை தொடர்பாக அவரின் மகள் தலக்ஷன மற்றும் அஜற், சுமன், நிலக்ஷன் ஆகிய நான்கு மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 3, 4 ஆம் சந்தேக நபர்கள் இருவருக்கும் தற்போது நடைபெறும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

(அ-2)

# எதையும் சாதிக்கும் மதிநுட்பம் கொண்டவர் நெல்சன் மண்டேலா



## அமைச்சர் டக்ளஸ் இரங்கல்

(கொழும்பு)

தான் நேசித்த மக்களை அழிவுகளிலும் அவலங்களிலிருந்தும் பாதுகாத்து அவர் களை சுதந்திர பிரஜைகளாக வாழவைத்த நெல்சன் மண்டேலா உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அனுபவ பாடப் புத்தகமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு கடந்த 6 ஆம் திகதி உரையாற்றும் போது மறைந்த முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல் சன் மண்டேலாவுக்கு சபையில் அமைச்சர் அனுதாபம் தெரிவித்ததோடு தனது இறுதி அஞ்சலியையும் செலுத்தினார். இதன்போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்க மண்ணில் தோன்றிய நெல்சன் மண்டேலா என்ற மகத்தான மனி தர் இம்மாதம் 6 ஆம் திகதி மறைந்துவிட்டார்.

ஆபிரிக்க கண்டத்தில் உதித்தாலும் கண் டங்கள் பல தாண்டி உலகெங்கும் ஒளிவிட்ட அந்தக் கறுப்புச் சூரியனை இந்தச் சபையில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எவ்வாறு பக்குவமாக, தந்திரமாக உரிமை களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு அவர் உலகத்திற்கு ஒரு சிறந்த உதார ணமாக விளங்குகிறார்.

அத்துடன் எதிர்நிலையில் உள்ளவர்களுக் கும் உண்மை நிலவரங்களை எடுத்து விளக்கி எதையும் சாதிக்கும் மதிநுட்ப சிந்தனையைக் கொண்டவர். தான் நேசித்த மக்களை அழிவுகளிலும் அவலங்களிலிருந்தும் பாதுகாத் தது மட்டுமல்லாமல் அந்த மக்களை சுதந்திர பிரஜைகளாகவும் வாழவைத்த பெருமையு ள்ள நெல்சன் மண்டேலா சகலருக்கும் ஓர் அனுபவப் பாடப் புத்தகம்.

இந்நிலையில் தமிழ்பேசும் மக்களின் சார் பாகவும் இலங்கைத் தீவின் சார்பாகவும் அரசாங்கத்தின் சார்பாகவும் உலகமெங்கும் வாழ் கின்ற ஒடுக்கப்பட்ட மக்களை தன்பக்கம் ஈர்த்த அந்த மகத்தான தலைவருக்கு எனது அஞ்சலியையும் மரியா தையையும் செலுத் துகிறேன் என்றார்.

(அ-2)

# பொலிஸ்மா அதிபர்கள் உடனடி இடமாற்றம்

எட்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சட்டமும் ஒழுங்கும் அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சியின் அனுமதியுடன் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் இந்த இட மாற்றத்தை இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கியுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தரத்திலிருந்து கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக புதிதாக தரமுயர்த்தப்பட்டவர்களும் ஏற்கனவே கடமையில் உள்ளவர்களுமே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, இரத்திரனபுரி, கேகாலை, நுவரெலியா, காலி, புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகவே எட்டுப் பேரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான ரோகண டயஸ் றொஹான் டயஸ் யாழ்.மாவட்டத்திற்கும் ஜயந்த விக்ரமசிங்க வவுனியா மாவட்ட த்திற்க்கும், யு.கே. திஸாநாயக்க கிளிநொச்சி மாவட்டத்திற்கும் ரி.பி. சம்சுதீன் நுவரெலியா மாவட்டத்திற்கும் காமினி மத்துரட காலி மாவட்டத்திற்கும் மெக்ஸி புறக்டர் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கும் பொறுப்பான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த கித்சிறி கனேகம, புத்தளம் மாவட்டத்திற்கும் இரத்தினபுரி மற்றும் கேகாலைக்கும் பொறுப்பாக இருந்த மகேஷ் பெரேரா வி[illegible] இடமாற்றம் [illegible] (அ-2)


பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை
- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சி/5683)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 38 செவ் 7 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc Engineering / பொறியியலாளர் (லண்டன் - Work Permit)<br>தொ.இ: B/369 | பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 1கி.பா: 26 ½<br>உயரம்: 5"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/404 |
| பிறப்பு: 1976 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 55 செவ் 12 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம்<br>தொ.இ: B/409 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா: 52 செவ் 8 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc IT /ஆசிரியர்<br>தொ.இ: G/419 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 24உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MBA / காசாளர் (லண்டன் - Work Permit)<br>தொ.இ: B/464 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 60உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc கலைப்பட்டதாரி, தகவல் தொழில்நுட்பம் / லண்டன் (Student visa)<br>தொ.இ: G/451 |
| பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 11 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, CBF, DBF / Assistant Manager (வங்கி)<br>தொ.இ: B/479 | பிறப்பு: 1971 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 46 ¼ செவ் 1 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/466 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் வடுக்களை சுமந்த வண்ணமே எமது மக்கள் வாழ்ந்து வருகின்றனர்

## கிளி. முன்னாள் அரச அதிபர்

(கிளிநொச்சி)

**போரின் வடுக்களை சுமந்த வண்ணமே இன்றும் எமது மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தின் தலைவரும் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபருமான தி.இராசநாயகம் தெரிவித்தார்.**

கிளி.மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல மகளிர் வளாக கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்றும் 3 ஆயிரத்து 205 விதவைகள் உள்ளதோடு 3 ஆயிரத்து 700 பேர் அங்கவீனர்களாகவும் 3 ஆயிரத்து 500 பேர் தாய் தந்தையரை இழந்த அநாதைகளாகவும் உள்ளனர்.

எமது இல்லத்தில் உள்ள பிள்ளைகளில் 38 பேர் இன்றும் யுத்தத்தின் வடுக்களைச் சுமந்தவர்களாகவுள்ளனர்.

இங்கு வசிக்கும் ஒருசிறுமிக்கு யுத்தத்தில் படுகாயமடைந்து தலையிலுள்ள மண்டையோட்டின் ஒரு பகுதிகூட இல்லாது வாழ்ந்து வருகின்றார்.

இவ்வாறு ஒவ்வொரு பிள்ளைகளும் ஏதோ ஒருவிதத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அவற்றின் வடுக்களை சுமந்தவாறே உள்ளனர். யுத்தத்தினால் இங்குள்ள அனைத்து பிள்ளைகளும் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அப்பிள்ளைகள் மனதளவில் பாதிக்கப்பட்டவர்களாகவே இன்றும் இருந்தும் வருகின்றனர்.

அவர்களை ஆற்றுப்படுத்துவதற்கு நாம் கலைகள், விளையாட்டுக்கள் என்பவற்றில் ஈடுபடுத்தி வருகின்றோம்.


இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மெல்லக் கற்கும் போக்கை உடையவர்களாக இருந்து வருகின்றனர்.

அதனால்தான் எமது ஆச்சிரமத்திலேயே பட்டதாரி பயிலுநர்களை நியமித்து கல்வி புகட்டி வருகின்றோம்.

இவ்வாறு உடன்பிறந்த உறவுகளாகிய இவ் உறவுகளுக்கு நாம் என்றும் பக்கபலமாக இருக்கவேண்டும். இதனை புலம்பெயர் உறவுகளும் வணிகர் கழகங்களும் மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

(ம-4)

## அபிவிருத்திக்குழு பொதுக்கூட்டம்



(இராமநாதபுரம்)

புதுக்குடியிருப்பு சிவநகர் பிரிவு கிராம அபிவிருத்தி குழு தெரிவு கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 23 ஆம் திகதி சிவநகர் கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் சிவநகர் மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-269)




# கடன் தருவதாக கூறி ஏமாற்றியவர் கைது

(பூந்தோட்டம்)

வவுனியா விளக்குவைத்தகுளம் கிராம மக்களுக்கு கடன் வழங்குவதாக கூறி பலரிடம் பண மோசடியில் ஈடுபட்டவர் ஓமந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இம் மக்களிடம் 4 ஆயிரத்து 500 ரூபா வீதம் 20 பேரிடம் பணத்தை பெற்றிருந்த நாகர்இலுப்பைக்குளத்தை சேர்ந்த ஒருவர் கடன் வழங்குவதாக கூறி நேற்று முன்தினம் சிலரிடம் தொடர்பு கொண்டு 46 ஆயிரத்து 100 ரூபாவுடன் ஓமந்தைக்கு வருமாறு தெரிவித்திருந்த நிலையில் கடன் கிடைக்கும் என எதிர்பார்த்து வந்தவர்களில் சிலருக்கு சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து பொலிஸாருக்கு வழங் கிய தகவலை அடுத்து ஓமந்தை பொலிஸ் புலனாய்வாளர்கள் இவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து ஓமந்தை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை வவுனியா வடக்கு பிரதேசத்தில் பலரும் கடன் வழங்குவதாக தெரிவித்து அங்குள்ள மக்களை ஏமாற்றி வருவதாகவும் இது தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் அறிவித்துள்ளதுடன் அரசினால் அங்கீகரித்த வங்கிகளில் மாத்திரம் பண வைப்புகளை மேற்கொள்வதுடன் கடன் விண்ணப்பங்களை மேற்கொள்ளுமாறும் கோரியுள்ளார். (ம-266)



எச்.ஐ.வி. இலிருந்து பாதுகாப்பது எவ்வாறு எனும் தொனிப் பொருளில் வவுனியா புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு கூட்டத்தில் புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.எம்.எம்.ஜமால் உரையாற்றுவதையும் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கலந்து கொண்ட மக்களையும் படத்தில் காணலாம்.

(படம்:- குருமன்காடு செய்தியாளர்)

# வவுனியாவில் கடந்த பத்து மாதத்தில் 46 பெண்கள் மீதான வன்முறை சம்பவங்கள்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த தை மாதத்தில் இருந்து கடந்த ஒக்டோபர் மாதம் வரையில் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் 46 சில பெண்கள் அமைப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண பெண்கள் மாற்றத்திற்கான பரிந்துரை வலையமைப்பு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 6 முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகமாகவும் 16 முறைப்பாடுகள் பாலியல் வல்லுறவுகளாகவும் 24 முறைப்பாடுகள் சிறுமிகள் மீதான வல்லுறவாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பில் 37 முறைப்பாடுகளும் அம்பாறை மாவட்டத்தில் 19 முறைப்பாடுகளும் மன்னார் மாவட்டத்தில் 49 முறைப்பாடுகளும் முல்லைத்தீவில் 10 முறைப்பாடுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 9 முறைப்பாடுகளும் யாழ் மாவட்டத்தில் 44 முறைப்பாடுகளும் சில பெண்கள் அமைப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பெண்கள் மீதான வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு இலங்கையின் எந்த இடமானாலும் பாலியல் வன்முறைகள் இடம்பெற்றவுடன் துரிதமாக விசாரணைகள் இடம்பெற்று சாட்சிகள் சேகரிக்கப்பட வேண்டும். சந்தேக நபர்களுக்கு 14 நாட்கள் தடுப்பு காவல் வழங்கப்பட்டு பின்னர் சாட்சிகள் போதவில்லையென தள்ளுபடி செய்வதை தடுத்தல் வேண்டும்.

சட்டவைத்திய பகுப்பாய்விற்காக அனுப்பப்படும் தடயங்கள் துரிதமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு சரியான முடிவுகளையும் அறிக்கைகளையும் உரிய காலத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் வன்முறைக்குட்படுத்தப்பட்டவர்களுக்கும் மற்றும் குடும்பத்தவர்களுக்கும் வைத்திய அதிகாரிகள் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கான நீதி விரைவாக வழங்கப்பட வேண்டும். 1995,1999ஆம் ஆண்டு தண்டனைச்சட்டக்கோவை சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட பெண்கள் சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்கள் புரிபவர்களுக்கு உச்ச பட்ச தண்டனை வழங்குவதற்கான தண்டனைச்சட்டக்கோவையை அமுல்படுத்தல் வேண்டும். பொறுப்புமிக்க நீதித்துறையினரே, அதிகாரிகளே, உண்மையான நீதிக்காகவும், மனித நேயத்திற்காகவும் பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்து ஆதரவு வழங்கி சமூகத்தில் இவ்வாறான வன்முறைகள் அதிகரிக்கா வண்ணம் இருப்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு பகுதிகளின் பொலிஸ் நிலையத்தின் பெண்கள் சிறுவர் பிரிவு பலப்படுத்துவதும், அங்கே தமிழ் பேசும் பெண் பொலிசாரை கடமையில் ஈடுபடுத்தலை உறுதிப்படுத்தல். சமூகத்திலுள்ள பெண்கள், ஆண்கள் அனைவரும் இணைந்து சம்பந்தப்பட்ட சட்டத்துறை, வைத்தியத்துறை, பாதுகாப்புத்துறை, அரச, அரச சார்பற்ற துறைகளுக்கு அழுத்தம் கொடுத்து பெண்களுக்கெதிரான வன்முறைகளை முடிவிற்கு கொண்டு வருவதற்கான செயல்வாதப் பயணங்களைத் தொடரவேண்டும் என்ற பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளனர். (ம-250-266)

## கம்பனில் நான் நூல் வெளியீடு

(பூந்தோட்டம்)

கலாநிதி அகளங்கனின் கம்பனில் நான எனும் கட்டுரை நூல் வெளியீடு எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த முழுநிலா நிகழ்வில் இடம்பெறவுள்ள இவ் வெளியீட்டு நிகழ்வு கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் ,சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், ம. தியாகராசா, இ. இந்திரராஜா, க. சிவலிங்கம், சி. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்க தலைவர் நா. சேனாதிராஜா, இந்து மாமன்ற தலைவர் வை. செ. தேவராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## விவசாயமும் உணவுத் தொழிநுட்பமும்-II

முதலாம் வினாவுக்கும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக

01. உலர்வலயத்திலுள்ள பாடசாலையொன்றில் 1/4 ஹெக்டெயர் நிலப்பரப்பில் பண்ணையொன்றை அமைக்குமாறு மாணவர்கள் வேண்டப்பட்டுள்ளனர். அதற்கமைய மாணவர்கள் அந்தப் பண்ணையை பின்வருமாறு தயாரிப்பதற்கு உத்தேசித்தனர்.

✷ நிலத்தின் ஒரு பகுதியில் நான்மடியச் சுழற்சிப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்

✷ மற்றொரு பகுதியில் நகர்ப்புற வீட்டுத் தோட்டத்தை அமைத்தல்

✷ பண்ணையைப் பாதுகாக்கவென உயிர்த்தாவர வேலி அமைத்தல்

1. நான்மடியச் சுழற்சியில் பயன்படுத்தக் கூடிய பயிர்த்தொகுதிகள் நான்கு தருக?

2.இவ்வாறான பயிர்ச்சுழற்சி முறையைக் கைக்கொள்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு தருக?

3.இந்தப் பண்ணையில் முதற் பண்படுத்தலுக்கெனப் பயன்படுத்தக் கூடிய உபகரணங்கள் இரண்டு தருக?

4.முதற் பண்படுத்தலின் பிரதான நோக்கங்கள் இரண்டு தருக?

5.உயிர் வேலிக்கென நாட்டப்படக் கூடியதும் பசுந்தாட் பசளையாகப் பயன்படுத்தக் கூடியதுமான தாவர வகைகள் இரண்டு தருக?

6.நகர்ப்புற வீட்டுத்தோட்டத்துக்கெனத் தயார்செய்யப்பட்ட பகுதியில் குறைந்த செலவில் அமைக்கக் கூடிய கட்டமைப்புகள் இரண்டு தருக?

7. மழைநீரை நம்பிப் பயிர்செய்வதற்கு மாணவரால் பண்ணை நடவடிக்கைகளை ஆரம்பிக்க உகந்த பயிர்ச் செய்கைப் போகத்தைக் குறிப்பிட்டு அந்தப் போகத்தில் மழை கிடைக்கும் விதத்தைக் குறிப்பிடுக?

8.இந்தப் பண்ணையில் பயன்படுத்தத்தக்க சேதனப் பசளைகள் இரண்டைக் குறிப்பிடுக?

9.சேதனப் பசளைப் பயன்பாட்டினால் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக?

10 இந்தப் பயிர்ச் செய்கையில் சீதேவியார். செங்கழுநீர், சிறுகோரை ஆகிய களைவகைகள் காணப்பட்டன. இந்த களை வகைகளை வாழ்க்கை கால அளவின் அடிப்படையில் பாகுபடுத்துக?

(2X10=20 புள்ளிகள்)

02. மாணவரொருவர் மண் ஈரலிப்புப் பற்றிய செய்முறையொன்றை மேற்கொள்வதற்கென A,B,C ஆகிய பூச்சாடிகள் மூன்றினைத் தயாரித்து அவற்றுக்கு நீரிட்டார். அதன்போது அவரால் பெறப்பட்ட அவதானிப்புக்கள் வருமாறு,

A- சாடியில் காணப்பட்ட நீர்செல்துளையினூடாக நீர் வடிந்த வண்ணம் காணப்பட்டது.

B-சாடியிலுள்ள நீர்செல்துறையினூடாக நீர் வடியவில்லையெனினும் அதில் காணப்பட்ட மிளகாய்ச் செடி செழிப்பாகக் காணப்பட்டது.

C- சாடியில் காணப்பட்ட தாவரம் வாடிக்காணப்பட்டதுடன் நீரிட்டதும் மீண்டும் பழைய நிலையை அடைந்தது.

1. மேலே கூறப்பட்ட A,B,C ஆகிய சாடிகளில் உள்ள மண் வகைகளின் ஈரலிப்பு நிலைகளை முறையே குறிப்பிடுக

(புள்ளிகள் 3)

2. மண்ணீர் நிலவும் விதங்கள் (வகைகள்) மூன்றைப் பெயரிடுக?

(புள்ளிகள் 3)

3.a) இவற்றுள் சாடி A யிலிருந்து வடிந்து செல்லும் நீர் எவ்வகையானதாகும்?

b) சாடி B யில் காணப்படும் மண்ணிலுள்ள நீர் எவ்வகைக்குரியதாகும்?

c) சாடி C யில் காணப்படும் மண்ணிலுள்ள நீர் எவ்வகைக்குரியதாகும்.

(புள்ளிகள் 4)

03. 1. ஒன்றிணைந்த தாவர போசணை முகாமைத்துவம் என்றால் என்ன?

(புள்ளிகள் 2)

2. a) நிறை (பூரண) போசணைக் கலவையில் அடங்கியுள்ள பிரதான போசணை மூலக வகைகள் யாவை?

b) மேற்கூறப்பட்ட மூலகங்களுள் தாவரங்களில் பூக்கள், காய்கள் ஆகியன தோன்று வதற்கு அவசியமான தாவர மூலகம் எது? (புள்ளிகள் 4)

3.கூட்டெரு தயாரித்தலின் போது மேற்கொள்ளப்படும் பின்வரும் படிமுறைகளுக்கான காரணங்கள் யாவை?

a).மூலப்பொருட்களை இட்முன்னர் அடியில் உமிப்படை இடுதல்

b) மூலப்பொருட்கள் கொண்ட படைகளிடையே சிறிதளவு கூட்டெரு இடுதல்

உ) மூலப் பொருட்கள் கொண்ட படைகளிடையே சிறிதளவு கூட்டெரு இடுதல்

d) படையாக இடப்பட்ட மூலப்பொருட்களை இரண்டு வாரங்களுக்கொரு முறை புரட்டுதல் (புள்ளிகள் 4)

04. பாடசாலையொன்றில் விவசாயப் பாடம் கற்கும் தரம் -11 மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவும் பின்வரும் தலைப்புக்களில் தகவல் சேகரிக்குமாறு ஆசிரியர் கூறினார்.

குழு-1 பயன்களின் அடிப்படையில் பண்ணை விலங்குகளை வகைப்படுத்தல்

குழு-2 மாடு வளர்ப்பு முறைகள்

குழு-3 முட்டையிடும் கோழிகளைப் பராமரித்தல்

1. குழு-1 மாணவர்கள் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக

| விலங்கு வகை | வகைப்படுத்தல் | உதாரணம் |
|---|---|---|
| a) மாடு | 1..............................<br>2..............................<br>3.இழுவை | 4. பிறிசியன்<br>5.ஹெரிபோர்ட்<br>6.............................. |
| b)எருமை | 7.............................. | 8.முறா |
| c) ஆடு | 9.............................. | 10சாணன் |
| d) கோழி | 11..............................<br>12..............................<br>13.............................. | 14.லெகோன்<br>15.ஹைபுறோ<br>16 ஒஸ்ரலோப் |

(புள்ளிகள் 4)

1. குழு-2 இனால் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய பிரதான மாட்டு வளர்ப்பு முறைகள் யாவை? (புள்ளிகள் 3)

3. சிறந்த முட்டையிடும் பேட்டுக் கோழியின் இயல்புகள் மூன்று தருக? (புள்ளிகள் 3)

05. பாடசாலைப் பண்ணையில் மேற்கொள்ளப்பட்டிருந்த வாழைச் செய்கையில் பின்வரும் குறைபாட்டு அறிகுறிகள் அவதானிக்கப்பட்டன.

✷ இலைகளின் பச்சை நிறம் அதிகரித்தல்

✷ இலைப் பரப்புச் சிறுத்தல்

✷ சதப்பத்திரவுரு ஏற்படல்

✷ தாவரம் குட்டையாதல்

1. a) இந்த வாழைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ள நோய் யாது?

b) இந்த நோய்க்கான நோய்காரணியைக் குறிப்பிடுக? (புள்ளிகள் 2)

2.தாவரமொன்றில் நோய் ஏற்பட பூரணப்படுத்தப்பட வேண்டிய நிபந்தனைகள் மூன்றும் யாவை? (புள்ளிகள் 3)

3. a) நாற்றுமேடைகளில் அதிகளவில் ஏற்படும் பங்கசு நோய் யாது?

b) அந்த நோய்க்கான பங்கசின் பெயர் யாது?

c) அந்த நோய்க்குரிய பிரதான அறிகுறிகள் யாவை? (புள்ளிகள் 5)

06.இலிங்கமுறை இனப்பெருக்கத்தின்போது நடுகைப் பொருட்களாக வித்துக்கள் பயன்படுத்தப்படும். வித்துக்களை நாட்ட முன் அவற்றிற்கு பல்வேறு பரிகரிப்புக்களை விவசாயிகள் மேற்கொள்வர்.

1.a)வித்து உறங்குநிலை என்றால் என்ன? (புள்ளிகள் 2)

b) பின்வரும் வித்துக்களின் உறங்குநிலையை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் முறை ஒவ்வொன்று வீதம் தருக?

A) மா B) தக்காளி C) தேக்கு D)நெல்

(புள்ளிகள் 2)

2.a) அன்னாசித் தாவரத்தின் பல்வேறு பாகங்களில் உண்டாகும் உறிஞ்சிகள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும். இவற்றுள் நாட்டுவதற்கு மிகவும் உகந்த உறிஞ்சி வகை யாது?

b) இந்த வகை உறிஞ்சிகளை நாட்டுவதற்குத் தயார் செய்யும் விதத்தை விபரிக்குக?

(புள்ளிகள் 4)

3. துளிமுறை (கசிவுமுறை) நீர்ப்பாசனத்தின் அனுகூலங்கள் நான்கு தருக?

(புள்ளிகள் 2)

07 உணவு வகைகளை நற்காப்பு செய்வதற்காக பல்வேறு வகைப்பட்ட நற்காப்பு முறைகள் பயன்படுத்தப்படும்.

1. பின்வரும் ஒவ்வொரு உணவு நற்காப்பு முறைகளுடன் தொடர்பான கோட்பாட்டினை முறையே குறிப்பிடுக.

a- உலர்த்தல்

B- குளிர்த்துதல்

C- பாய்சராக்கம்

D- கிருமியழித்தல் (புள்ளிகள் 4)

2. மேற்கூறப்பட்ட நற்காப்பு முறைகளைப் பயன்படுத்தி நீண்ட காலம் பேணக் கூடிய உணவு வகைகளுக்கான உதாரணம் ஒவ்வொன்று வீதம் குறிப்பிடுக

(புள்ளிகள் 2)

3. a) உணவு பழுதடைவதைத் தவிர்ப்பதற்கு பல்வேறு செயற்கை நற்காப்புப் பதார்த்தங்கள் உணவுடன் சேர்க்கப்படுகின்றன. இவ்வாறான செயற்கை நற்காப்பு பதார்த்தங்கள் இரண்டைப் பெயரிடுக.

b) யோகட் உற்பத்திச் செயன்முறையின் போது மேற்கொள்ளப்படும் பின்வரும் செயன்முறைகளுக்கான காரணங்களைக் குறிப்பிடுக?

a) பாலை நன்கு கொதிக்கக் காய்ச்சுதல்

b) அதன் பின்னர் கலவையை 42-45°C வரை குளிரவிடல் (புள்ளிகள் 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேதைகள்


முன்னொரு சமயம் விஷ்லர் என்ற ஓர் ஓவிய நிபுணர் இருந்தார். அவர் ஓவிய நிபுணர் மட்டுமல்ல. தலை சிறந்த மேதையும்கூட. அவர் வசித்து வந்த ஊரில் மற்றொரு ஓவியர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் ரோசெட்டி என்பதாகும்.

ஒருநாள் விஷ்லர், ரோசெட்டியின் வீட்டுக்குச் சென்று இருந்தார். ரோசெட்டி அவரிடம் அப்போதுதான், வரைந்து கொண்டிருந்த ஓர் ஓவியத்தை எடுத்து வந்து காட்டினார். அதுபற்றி விஷ்லரின் அபிப்ராயத்தை அவர் கேட்டார். விஷ்லர் அந்த ஓவியத்தைப் பார்த்தார்.

உண்மையிலேயே அந்த ஓவியம் மிக அற்புதமாக இருந்தது. ஆகவே. அவர் ரோசெட்டியை மனம் திறந்து பாராட்டினார். உண்மையில் அப்போது ரோசெட்டி அந்த ஓவியத்தை முழுதாக முடிக்கவில்லை.

வண்ணம் தீட்ட வேண்டிய இடங்கள் நிறைய இருந்தன. ஆகவே அவர், "இந்தந்தப் பகுதிகளில் வண்ணம் தீட்டியிருந்தால் இன்னும் அற்புதமாக இருக்குமே..." என்று தன் அபிப்ராயத்தைத் தெரிவித்தார்.

"இன்னும் சில நாட்களிலே அந்தப் பணியும் முடிந்து விடும். நீங்கள் இன்னும்



இரண்டு மூன்று நாட்கள் கழித்து இங்கு வந்திருந்தால் முழுமை பெற்ற படத்தைப் பார்த்திருப்பீர்கள்..." என்று ரோசெட்டி பதில் கூறினார்.

ஒருவாரம் ஆயிற்று. தற்செயலாக அவரைக் கடை வீதியில் சந்தித்தார் விஷ்லர்.

"என்ன மிஸ்டர் ரோசெட்டி, உங்களுடைய படம் எந்த அளவில் இருக்கிறது?" என்று அவர் கேட்டு வைத்தார்.

"அந்தப் படம் நிறைவு பெற்றுவிட்டது. இப்போது அந்தப் படத்துக்குச் சட்டமிடுவதற்காக ஒரு சட்டத்தைச் செய்யச் சொல்லி இருக்கிறேன். அதை எதிர பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன். அதுவும் வந்து, சட்டமும் இட்டு விட்டால் அந்தப் படம் பூரண நிறைவு பெற்றுவிட்டது என்று பொருள்," என்று கூறினார்.

இரண்டொரு வாரங்கள் கழிந்தன. தற்செயலாக விஷ்லர், ரோசெட்டி வீட்டுக்குச் சென்றார். பேச்சுக்கிடையே, "சட்டம் வந்து சேர்ந்து விட்டதா? நீங்கள் பூரண நிறைவு பெறும்படி ஓவியத்தைச் செய்து விட்டீர்களா?" என்று கேட்டார்.

"ஓ முடித்து விட்டேன்! வாருங்கள் காட்டுகிறேன்," என்று ரோசெட்டி அவரை அழைத்துச் சென்று சட்டமிடப்பட்ட தன் ஓவியத்தைக் காண்பித்தார்.

அந்த ஓவியத்தைச் சுற்றி மிக அழகான சட்டம் ஒன்று இடப்பட்டிருந்தது.

"ஆஹா! சட்டமும் அற்புதம்!" என்று பாராட்டினார் விஷ்லர்.

"அதன் பிறகு என்ன செய்தீர்கள், புதிய ஓவியம் ஏதாவது வரைந்தீர்களா?" என்று கேட்டார் விஷ்லர்.

"இல்லை. அதற்கான அவகாசம் எனக்கு இல்லை!" என்றார் ரோசெட்டி.

விஷ்லர் ஆச்சர்யம் அடைந்தார்.

"ஓவியம் வரைவது உங்கள் வேலை. ஆனால், ஓவியம் வரையவில்லை. இந்த ஓவியமும் முடித்துவிட்டீர்கள். அப்படி இருக்க அவகாசம் இல்லை என்று கூறுகினீர்களே! இது என்ன அதிசயம்!" என்று கூறினார்.

"மிஸ்டர் விஷ்லர் நான் ஓவியம் வரையத்தான் அவகாசம் இல்லை என்றேன. அதற்காக நான் ஓய்வெடுக்கவில்லை!" நான் வரைந்த ஓவியத்தைப் பற்றி அழகான கவிதை ஒன்றை எழுதினேன். கவிதை எழுதவே இத்தனை நாட்களாயிற்று!" என்று கூறினார்.

"கவிதையா?" என்று ஆச்சர்யமடைந்த விஷ்லர் "எங்கே காட்டுங்கள்?" என்றார். அவர் மிகப் பெரிய மேதையல்லவா?

ரோசெட்டி கவிதையை எடுத்து வந்து தனக்கே உரித்தான கம்பீரமான குரலில் ஏற்ற இறக்கங்களுடன் சரியான பாவனையுடன் அதைப் படித்துக் காட்டி விட்டு விஷ்லரிடம் தந்தார்.

விஷ்லர் கவனமாக அதைக் கேட்டார். பின் தானே ஒருமுறை படித்துப் பார்த்தார்.

"உங்களுடைய ஓவியத்தை விட இந்தக் கவிதை அபாரம் அற்புதம். நல்ல கற்பனை! நீங்கள் அந்த ஓவியத்தைச் சட்டத்திலிருந்து எடுத்து விட்டு இந்தக் கவிதைக்குப் போடுங்கள் அந்தச் சட்டத்தை!" என்று கூறினார்.

குழந்தைகளா! மற்றவர்களின் திறமையை நாம் பாராட்ட வேண்டும், அந்த மனநிலை நம்மிடம் இருந்தால் நாம் மாமேதையாக திகழலாம்.

12.2013
10

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1041-பைசண்டைன் பேரரசி சோயி தனது வளர்ப்பு மகனை ஐந்தாம் மைக்கல் என்ற பெயரில் பேரரசனாக்கினாள்.
- 1541- பிரித்தானியாவின் எட்டாம் ஹென்றியினால் தொமஸ் கல்பெப்பர்ம் பிரான்சிஸ் டெரெகம் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1655- யாழ்ப்பாண ஆளுநர் அன்டோனியோடி மெனேசா மன்னாரில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் முகத்துவாரம் என்னும் இடத்தில் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- 1684-ஐசாக் நியூட்டன் தனது புவியீர்ப்பு விதிகளின் கொள்கைகளில் எழுதிய கெப்லரின் விதிகளின் தீர்வுகள் ரோயல் சபையில் வாசிக்கப்பட்டது.
- 1817-மிசிசிப்பி ஐக்கிய அமெரிக்காவின் 20வது மாநிலமாக இணைந்தது.
- 1868-உலகின் முதலாவது சமிக்கை விளக்குகள் லண்டனில் நாடாளுமன்றுக்கு வெளியே நிறுவப்பட்டது.
- 1898-ஸ்பெயின்- அமெரிக்கா போர் நிறுத்த உடன்பாடு பாரிசில் கைச்சாத்திடப்பட்டது.
- 1901-முதலாவது நோபல் பரிசுகள் வழங்கப்பட்டது.
- 1902-தஸ்மேனியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1906-அமெரிக்க அதிபர் தியொடோர் ரோசவெல்ட் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். இது ஒரு அமெரிக்கர் பெற்ற முதலாவது நோபல் பரிசாகும்.
- 1936- இங்கிலாந்தின் எட்டாம் எட்வேரட் மன்னன் முடி துறப்பதாக அறிவித்தான்.
- 1941-இரண்டாம் உலகப்போர்: மலாயாவுக்கு அருகாக ஐக்கிய இராச்சியத்தின் இரண்டு கடற்படைக் கப்பல்கள் ஜப்பானியர்களால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1941-இரண்டாம் உலகப்போர்: ஜப்பானியப் படைகள் பிலிப்பைன்சை அடைந்தனர்.
- 1948-மனித உரிமைகள் குறித்த அனைத்துலகப் பிரகடனத்தை ஐ.நா பொதுச்சபை அறிவித்தது. இந்நாள் உலக மனித உரிமைகள் நாள் ஆக அறிவிக்கப்பட்டது.
- 1975-ரஷ்யரான அந்திரேய் சாகரொவ் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.
- 1981-தெற்காசியாவை அணுவாயுதமற்ற பகுதியாக அறிவிக்க பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையை ஐ.நா. பொது அவை ஏற்றுக் கொண்டது.
- 1984-தென்னாபிரிக்க கறுப்பின மதகுரு டெஸ்மண்ட் ரூட்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.
- 1989-மங்கோலியா கம்யூனிசத்தில் இருந்து மக்களாட்சிக்கு அமைதியாக மாற்றம் பெற்றது.

பிறப்புக்கள்

- 1750-திப்பு சுல்தான், மைசூர் இராச்சியத்தின் மன்னன் (இ.1799)
- 1804-ஜேகோபி, ஜெர்மனிய கணித மேமை (இ.1851)
- 1851-மெல்வில் டியூவி-அமெரிக்கா, நூலக அறிவியலை வளர்த்தவர் (இ.1931)
- 1878-ராஜாஜி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சுதந்திர இந்தியாவின் முதலாவது ஆளுநர் (இ.1972)
- 1891-நெல்லி சாக்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1970)
- 1934-ஹவர்டு மார்டின் டெமின்- அமெரிக்கா வைரசுகளைப் பற்றிய ஆராச்சிக்காக 1975 இல் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.

இறப்புக்கள்

- 1896-அல்பிரட் நோபல், சுவீடனைச்சேர்ந்த கண்டுபிடிப்பாளர் (பி.1833)
- 1987-சுப்ரமண்ய ராஜு, தமிழ் எழுத்தாளர் (பி.1948)
- 2006-ஆகுஸ்டோ பினோச்சே, சிலி நாட்டு சர்வாதிகாரி (பி.1915)

சிறப்புநாள்
மனித உரிமைகள் தினம்

### உலக மனித உரிமைகள் தினம்

உலக மனித உரிமைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி கடைப் பிடிக்கப்படுகிறது. 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ஒன்றுகூடிய ஐக்கிய நாடுகளின் பொது அவையால் அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதை பெருமைப் படுத்தும் பொருட்டு இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

Human Rights

ஐ.நாவின் பொது அவை நாடுகளுக்கும் தன்னார்வ நிறுவனங்களுக்கும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க 1950 முதல் உலக மனித உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அவையின் நிகழ்வுகளில் முதன்மையான இந்நாளில். நியூயோர்கில் அமைந்துள்ள அதன் தலைமைப்பீடத்தில் முக்கிய நிகழ்வுகள் இடம்பெறுவது வழக்கமாகும். இந்நாளில் ஐந்தாண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் நோபல் பரிசு வழங்கப்படும். மேலும் பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்நாளில் பல முக்கிய நிகழ்வுகளை நடத்துவது வழக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்கின் மேல் கோபம் வருகிறதா?



ஆன்மீகம் 63

**கேள்வி:-** எதற்கெடுத்தாலும் குறை கண்டுபிடிக்கும் என் மாமியாரால் தினம் தினம் வேதனை அனுபவிக்கிறேன். என் கோபத்தை எங்கே காட்டுவது? என் குழந்தைகள்மீது காட்டுகிறேன். கையில் கிடைத்ததைத் தூக்கி எறிகிறேன். கோபம் அடங்கியதும், நானா இப்படி நடந்து கொண்டேன் என்று எனக்குள்ளே வெட்கப்படுகிறேன். என்ன செய்வது?

சத்குரு:- யாரோ ஒருவனுக்குக் கைகள் இல்லை. வேதனை கொள்கிறேன். இன்னொருவனுக்கு இரண்டு கைகளும் இருக்கின்றன. ஆனால், அவற்றை நிரப்பப் போதிய பணம் இல்லை. அவனும் வேதனையால் தவிக்கிறான். வேறொருவன் பணத்திலேயே புரள்கிறான். ஆனால், ஆசைப்பட்டதைச் சாப்பிட முடியவில்லை. வேதனைப்படுகிறான்.

இப்படி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் வேதனை கொள்கிறார்கள். தங்களை வருத்திக் கொள்கிறார்கள். சிலர் உங்களைப் போல் குழந்தைகளை வருத்துகிறார்கள். இதுதான் பைத்தியக்காரத்தனம்!

அமைதியாக இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் பலர், உண்மையில் அமைதியாக இல்லை. அவர்களுடைய பைத்தியக்காரத்தனம் கொஞ்சம் ஓய்வெடுத்துத் தூங்கிக் கொண்டு இருக்கிறது. அவ்வளவுதான்!

உங்களுக்கு ஜலதோஷம் என்று வைத்துக்கொள்வோம். அது உங்களை முடக்கிப்போடாதவரை அதைப் பெரிதுபடுத்த மாட்டீர்கள். அதற்காக உங்களுக்கு நோய் இல்லை என்று அர்த்தமில்லை. படபடப்பு, பயம், வக்கிரம், கோபம் என்று எத்தனையோ பைத்தியக்காரத்தனங்களும் அப்படிப்பட்ட நோய்கள்தான்.

அமைதியாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் பலர், உண்மையில் அமைதியாக இல்லை. அவர்களுடைய பைத்தியக்காரத்தனம் கொஞ்சம் ஓய்வெடுத்துத் தூங்கிக்கொண்டு இருக்கிறது. அவ்வளவுதான்! ஒரு குண்டூசி கொண்டு குத்தினால்போதும், பட்டென்று வெடித்துவிடும்.



இன்றைக்கு நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தங்கள் பைத்தியக்காரத்தனம் வெளிப்படாமல் இருக்கும்படியாக, ஒளித்துவைக்கும் தந்திரம் ஏதாவது உண்டா? என்றுதான் தவிக்கிறார்கள். அவற்றை மொத்தமாகக் களைவதுதான் ஆரோக்கியம் என்று யோசிப்பது இல்லை.

சங்கரன்பிள்ளை ஒரு நண்பரை இருபது வருடங்கள் கழித்துச் சந்தித்தார். அவர் இவரைத் தன் வீட்டுக்கு அழைத்துப்போனார். அங்கே, வீடு நிறைய பதினாறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். சங்கரன்பிள்ளை ஆச்சர்யமானார்.

குழந்தைகள் காப்பகம் ஏதாவது நடத்துகிறாயா? என்று கேட்டார்.

நீ வேற, எல்லாமே என் குழந்தைகள்!

சங்கரன்பிள்ளை பொறாமையில் பெருமூச்சுவிட்டார். உன் திருமண வாழ்க்கை அவ்வளவு சுகமானது போலிருக்கிறது!

ஐயோ... என் மனைவியைப்பற்றி உனக்குத் தெரியாது. சரியான ராட்சஸி என்றார் நண்பர்.

அப்புறம் எப்படியப்பா பதினாறு குழந்தைகள் பெற்றுக்கொள்ள மனம் வந்தது?

என் மனைவியைத் தனியாக சமாளிக்க எனக்கு துணிச்சல் இல்லை. வீட்டுக்குத் திரும்பினால், இந்த கூட்டத்தில் காணாமல் போகலாம் பார்! என்றார் நண்பர்.

இப்படித்தான் நீங்களும், உங்களைப் போன்ற பைத்தியக்காரர்களின் கூட்டத்தில் இருக்கும்போது, பாதுகாப்பாக உணர்வீர்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இலங். அரசு தமிழினத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கி வருகின்றது

**த**மிழீழ இடைக்கால நிர்வாக அரசின் இரண்டாவது அமர்வுக்கான தொடக்க நிகழ்வுக்கு கலந்து கொண்டுள்ள உறுப்பினர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

"எனது பெயர் ட்றோல்ஸ் றாவுன் [Troels Ravn]. தற்போதைய அரசின் சமூக ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினன். கல்வி சார்ந்த விடயங்களுக்குப் பொறுப்பானவன். நானொரு பாடசாலை அதிபருமாவேன்.

1985ல் டென்மார்க்கிற்கு வந்த தமிழ் அகதிகளின் தொடர்பு பள்ளிக்கூடத்தினூடு உருவானது. தமிழர்களின் கல்வி ஆர்வமும் முயற்சியும் அவர்கள் மட்டில் அசாதாரண ஈடுபாட்டை உருவாக்கியது. நீங்கள உங்கள் கலாச்சார பாரபரியங்களோடு வாழவிரும்புபவர்கள் மட்டுமல்ல ஏனைய கலாச்சாரங்களோடும் இலகுவாகக் கலந்து காலச்சூழ்நிலைகளுக்கேற்ப வாழ்வை அமைத்துக் கொள்பவர்கள். ஒரு பெருமை படைத்த சமூகமும் கூட.



டென்மார்க் நாடாளுமன்ற உறுப்பினர் ட்றோல்ஸ் றாவுன் ஆற்றிய உரையிலிருந்து....

ஒரு இன மக்களாக 2009ம் ஆண்டு யுத்தத்தின் இறுதி நாட்களில் தமிழர்கள் அனுபவித்த துன்ப துயர இழப்புக்களைக் தொலைக்காட்சி ஊடகங்களூடாக எமது மக்கள் கண்டபோது பெரும் அதிர்ச்சி அடைந்தார்கள். டென்மார்க் வானொலியில் தாய்மொழியை பயன்பாட்டு மொழியாகக் கொண்டு விரும்பிய மதத்தைத் தழுவி சமாதானத்துடனும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழ விரும்பும் உங்கள் உரிமைகளைப் பற்றி விரிவாக ஆராயப் பட்டது.

இதே உரிமைகளோடு உலகத்தை வாழவைப்பதற்காகவே 1945ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் நிறுவனம் உருவானது. நாடு விட்டு நாடு தாண்டி கண்டம் விட்டு கண்டம் பாய்ந்த ஒரு உலக யுத்தத்தின் பின்பே இது உருவானது. இனி ஒருபோதும் சிறுபான்மை என்பதற்காக நசுக்கப்படவோ இன மத காரணங்களுக்காக துன்புறுத்தப் படவோ கூடாது என்பதற்காகவே இவ் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவை அன்றைய இலட்சியங்களும் நோக்கங்களுமாக இருந்தபோதும் நாம் இன்று வரை இதற்காக உழைத்து வருகிறோம். இதைத் தொடர்ந்து உருவான ஐக்கிய நாடுகளின் பொருளாதார சமூகக் கலாச்சார அமைப்பானது பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்து கலாச்சார வேறுபாடுகளைப் பற்றிய புரிந்துணர்வுகளை வளர்க்கும் நோக்கங்களைக் கொண்டிருந்தது.

ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தின் பொறுப்பை கடமைகளை அதிகரிப்பதன் நோக்கமாக மனித உரிமை ஆணைக்குழுவும் உலக மனித உரிமைச் சாசனமும் 1948ல் அறிமுகப்படுத்தப்பட்டன.

குடியேற்ற ஆதிக்கங்கள் நாடுகளின் பழமைகளை சிதைத்து மத கலாச்சார எல்லைகளை அழித்தன. இந்நிலமைகள் படிப்படியாக மாறி பெயர் மாற்றப்பட்ட நாடுகளும் புதிய எல்லைகளும் உருவாக்கப் பட்டு சுய நிர்ணய உரிமைகொண்ட மக்களாக விடுதலை பெறுகையில் பழைய எதிரிகள் என்ற நிலைகளும் மத வேறுபாடுகளும் நிலம் ஆட்சி அதிகாரங்களைப்பற்றிய பேராசைகளும் கூடவே கிளர்ந்து எழுவதைக் காண்கின்றோம். ஆசிய ஆபிரிக்க நாடுகளே இதற்கு உதாரணங்களாகும். இலங்கையின் நிலமையும் இதுதான்.

சிங்கள அரசால் புகுத்தப்பட்ட சிங்களம் மட்டும் சட்டமும் சிங்கள மொழித் தேர்ச்சி அற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் மறுக்கப்படுதலும் கூடவே நிலப் பறிப்பும் தமிழர்களின் வாழ்வாதாரங்களை முழுமையாகப் பாதிக்கின்றன. பறிக்கப்பட்ட நிலங்களில் சிங்கள குடியேற்றங்களைத் தோற்றுவித்தல் இனத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்குகின்றது. வட கிழக்கில் குவிக்கப்பட்டுள்ள 300000 வரையான இராணுவத்தினரால் அடக்குமுறைகள் தொடர்ச்சியாக ஏவப் படுகின்றன.

கடத்தப்பட்டு காணாமல போகும் தகப்பன் மகன் சகோதரர்களும் பெண்களின்மேல் ஏவப்பட்டு வரும் பயங்கரமான பாலியல் தாக்குதல்களும் குழந்தைகள் அனாதைகளாக்கப் படுதலும் மன்னிக்கவோ பொறுத்துக் கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாத நிகழ்வுகளாகும்.

ஏப்ரல் 2013ல் டென்மார்க் நாடாளுமன்றத்தில் 'மறைக்கப்பட்ட மோதல்' என்ற தலைப்பில் இலங்கையின் மனித உரிமைகளைப்பற்றிய மகாநாட்டில் நான் அங்கத்துவம் வகிக்கும் சமூக சனநாயகக் கட்சியும் ஏனைய மூன்று கட்சிகளும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் பின் வரும் கோரிக்கைகள் அடங்கியிருந்தன.

அதாவது:-டென்மார்க் நாடானது யுத்த இறுதி நாட்களில் நடந்த அத்தனை கொலை குற்றங்களையும் பாரபட்சமின்றி சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென கோருகிறது.

மனித உரிமை மன்றத்தின் ஆணையாளர் தொடர்ச்சியாக இலங்கையின் மனித உரிமை நிலமைகளை கண்காணிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றது.

2009 இறுதி யுத்த நாட்களில் சரணடைந்த அத்தனை போர்க் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் அன்றேல் நீதி விசாரணைக்கு உட்படுத்தவேண்டுமென கோருகின்றது.

இடைக்கால நிர்வாக உறுப்பினர்களாகிய உங்கள் முன் இன்றுள்ள பணி உங்கள் நடவடிக்கைகள் மூலமாகவும் பரப்புரைகளூடும் இன்றைய நிலைமைகளை விளக்கி கடந்த காலங்களில் நடந்தவைகளையும் அனைத்துலகத்தாரின் அறிவுக்கும் உணரவுகளுக்கும் கொண்டு செல்வதேயாகும்.

இதன் வழி பலபடி முன்சென்றுள்ள உங்கள் முயற்சிகளோடு எமது பங்களிப்பும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று நான் நம்புகின்றேன்.

அமெரிக்காவைப் பாருங்கள். பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து ஆட்சி செய்த குடியேற்ற ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி சுயநிர்ணய உரிமைகொண்ட மக்களாக விடுதலை பெற்றார்கள். இதைத் தொடர்ந்து நடைபெற்று வந்த வட தென் மாநிலங்களுக்கிடையிலான யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து ஐக்கிய அமெரிக்க இராட்சியத்தை உருவாக்கினார்கள். 1960ல் பலமடைந்து நிகழ்ந்துவந்த குடியுரிமை இயக்கப் பேரணிகள் மூலம் சட்டரீதியான சம உரிமை எல்லா அமெரிக்கப் குடிமக்களுக்கும் உறுதி செய்யப்பட்டது.

டென்மார்க்கில் வாழும் நாம் நல் வாய்ப்பு பெற்றவர்களாயினும் நம் மூதாதையர்களான வைகிங்ஷ் இங்கிலாந்து உட்பட உலகின் ஒரு பகுதியை ஒருபொழுது ஆண்டவர்கள். இரண்டாம் உலக யுத்தத்தின்பொழுது யேர்மனியின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப் பட்டிருந்ததைவிட நாம் எப்போதும் சுதந்திரமாகவே வாழ்ந்துள்ளோம்.

இலங்கை அரசானது அனைத்துலகம் விதித்த கொள்கை கோட்பாடுகள் நடைமுறைகளை உதாசீனம் செய்து சிறுபான்மையின மக்களை காக்கத் தவறியமையும் சொந்த நாட்டின் கௌரவத்தை பேணத் தவறியமையுமே இப்போது வாக்குப் பெட்டிகளினூடு உங்கள் உரிமைப்போர் முன்னெடுகக்கும்படியானது. இதற்குரிய கௌரவத்தை உலகம் உங்களுக்குத் தரவேண்டும்.

இன்று வடமாகாண நிர்வாகம் தேர்தல் மூலம் நிலைநாட்டப்பட்டுள்ளபோதும் அரசியல் சாசனத்தால் நிர்ணயம் செய்யப் பட்டுள்ள மாகாணங்களுக்கான அதிகாரங்கள் மறுக்கப்படுவதை நாம் அறிவோம். மறுக்கப்படும் ஊடக சுதந்திரத்தால் உண்மைகளைக் கூற வரும் ஊடகவியலாளர்களின் உயிர்கள் பறிக்கப்படுகின்றன. சனநாயகத்தின் இருப்பிற்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள அபாய நிலமை இதுவாகும்.

டென்மார்க் நாடாளுமன்றப் பிரதிநிதி என்ற பொறுப்பிலிருப்பதால் நாமும் உங்கள் பிரதிநிதிகளும் உங்கள் நிலமைகளை டென்மார்க் மக்களுக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறோம். நாங்கள் யாவரும் ஒரே குரலில் உங்கள் நிலைமைகளை விளக்கி உங்கள் கோரிக்கைகளை அனைத்துலகத்தின் முன் வைப்போமேயானால் உங்கள் நியாயமான வேண்டுகோள்கள் கேட்கப்படும் நிலமைகள் உருவாகும்.

ஜனநாயக வழிகளைப் பற்றிக் கொண்டு நாடுகளையும் எல்லைகளையும் தாண்டி ஒரு பொது நோக்கத்திற்காகப் போராட வந்துள்ள நீங்கள் என்னை ஆச்சரியத்துக்குளளாக்கியுள்ளீர்கள். எனது ஆழ்ந்த மரியாதை உங்கள் அனைவருக்குமுண்டு.

எதிர்காலம் தமிழர்களுக்கு சமாதானத்தையும் வழமான வாழ்வையும் கொண்டு வரும். தமிழ் ஈழ இடைக்கால நிருவாக அரசானது இவைகளை அடைய உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்ற நற்செய்தியை இன்று உங்களிடம் விட்டுச் செல்கிறேன"

-புதினப்பலகை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# General Certificate of Education Ordinary Level 2013 (December)
# Solutions For The Model Exam Paper / Western Province

## ENGLISH LANGUAGE - PAPER I

**Test 01**
~~1.weather~~ 2.week 3.there 4.see 5.principal 6.caught
(1 x 5 = 5 marks)

**Test 02**
~~1.have~~ 2.have 3.has 4.have 5.had 6.have
(1 x 5 = 5 marks)

**Test 03**
If the sentences are grammatically correct and relevant
01 marks for each correct sentence. (5 marks)

**Test 04**
~~1.(c)~~ 2.(b) 3.(a) 4.(f) 5.(e) 6.(d)
(1 x 5 = 5 marks)

**Test 05**
(1) At 9.00 a.m
(2) When is the welcome song? / When does the welcome song begin/start?
(3) At 9.40 a.m
(4) 20 minutes
(5) Secretary of the English Literary Association. (1 x 5 = 5 marks)

**Test 06**
Content - 02
Language - 03 (5 marks)

**Test 07**
1. Yala West (Ruhuna) National Park
2. Over 100,000 hectares
3. 5 blocks
4. Block 01
5. Because it had been closed to visitors for some years. (1 x 5 = 5 marks)

**Test 08**
Content - 02
Language - 03 (5 marks)

**Content**

| | |
|---|---|
| 3 | All points included |
| 2 | Most of the points included |
| 1 | Only a few points included |
| 0 | Question copied / Totally irrelevant |

**Language**

| | |
|---|---|
| 3 | Almost no errors, well - connected sentences, good range of vocabulary |
| 2 | Few errors, well - connected sentences, good range of vocabulary |
| 1 | Only a few points included |
| 0 | All Sentences incorrect |

**Format & Organization**

| | |
|---|---|
| 2 | Well organized ideas, connected meaningful paragraphs. (Has used correct format of an official letter) |
| 1 | Ideas not well - connected, Errors in format |
| 0 | No organization at all |

**Mechanics of Writing**

| | |
|---|---|
| 2 | No spelling errors, Correct punctuation, Clear hand writting |
| 1 | Hand writting clear but errors in spelling and punctuation |
| 0 | Unintelligible writting |

## ENGLISH LANGUAGE - PAPER II

**Test 09**
2.management 3.abundance 4.vegetation 5.harshness 6.understand
(1 x 5 = 5 marks)

**Test 10**
1.to 2.on 3.at 4.in 5.from 6.of 7.with 8.around 9.through 10.by
(½ x 10 = 5 marks)

**Test 11**
1. ~~Lakshan said that he had made a few exhibits.~~
2. Isuru said that he hadn't decided on what to make.
3. Kaumadi said that she would make something special for the exhibition.
4. Vipula said that he was building a model of a city free of toxic gases.
5. Vageesha said that she didn't know what she could do, but she would do some thing.
6. Venuri said that she could collect their exhibits and arrange them nicely in the exhibition hall (1 x 5 = 5 marks)

**Test 12**
1.Sales Representative 2.Minimum 2 years experience
3.No 4.(More than) Rs 30,000
5.Names of two non related referees (1 x 5 = 5 marks)

**Test 13**
1.regard 2.parents
3.become 4.who
5.not 6.a
7.another's 8.also
9.they 10.others
11.always 12.have
13.ill - mannered 14.places
(½ x 14 = 7 marks)

**Test 14**
Content -03
Language -03
Organization -02
Mechanics of writing -02 (10 marks)

**Assessing Writing**

Marking criteria for tests 6, 8

Content - 02
Language - 03
Total - 05

**Content**

| | |
|---|---|
| 2 | All points included |
| 1 | Most of the points included |
| 0 | Question copied / Totally irrelevant |

**Language**

| | |
|---|---|
| 3 | Almost no errors, well - connected sentences, Correct spelling and punctuation |
| 2 | Few errors, well - connected sentences, Few errors in spelling and punctuation |
| 1 | Only a few correct sentances |
| 0 | All Sentences incorrect |

**Paper II Question - 14**

Content -03
Language -03
Format and Organization -02
Mechanics of writing -02
Total -10

## கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்)
### மாதிரி வினாத்தாளிற்கான விடைகள் / மேல் மாகாணம்
விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 4 | 21. | 2 | 31. | 1 |
| 02. | 3 | 12. | 2 | 22. | 1 | 32. | 2 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 2 | 33. | 3 |
| 04. | 1 | 14. | 3 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 1 | 35. | 4 |
| 06. | 1 | 16. | 2 | 26. | 3 | 36. | 4 |
| 07. | 3 | 17. | 1 | 27. | 4 | 37. | 4 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 3 | 38. | 4 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 1 | 20. | 4 | 30. | 4 | 40. | 2 |

## உலக கோப்பை காற்பந்து அட்டவணை

A பிரிவு
பிரேசில் குரோஷியா மெக்சிகோ கேமரூன்
B பிரிவு
ஸ்பெயின் நெதர்லாந்து சிலி அவுஸ்திரேலியா
C பிரிவு
கொலம்பியா கிரீஸ் ஐவரி கோஸ்ட் ஜப்பான்
D பிரிவு
உருகுவே கோஸ்டாரிகா இங்கிலாந்து இத்தாலி
E பிரிவு
சுவிட்சர்லாந்து ஈக்வடார் பிரான்ஸ் ஹொண்டுராஸ
F பிரிவு
ஆர்ஜென்டினா போஸ்னியா-ஹெர்சகோவா ஈரான நைஜீரியா
G பிரிவு
ஜேர்மனி போர்த்துக்கல் கானா அமெரிக்கா
H பிரிவு
பெல்ஜியம் அல்ஜீரியா ரஷ்யா தென் கொரியா

2014
FIFA WORLD CUP
Brasil

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி புலிகளால் ஏற்படுத்தப்பட்டதல்ல

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கின் முன்னேற்றம் மற்றும் அங்கு ஏற்பட்டுள்ள பாரிய கல்வி வளர்ச்சி புலிகளினாலோ அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினாலோ ஏற்பட்டதல்ல. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குக் கிடைத்த பிரதிபலனே அது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பிபிலை நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பிபிலை பிரதேச சபைக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நடைபெற்ற யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கு நூற்றுப்பதினேழு வீதமாகக் கல்வி வளர்ச்சியடைந்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

மந்த போசனம், வறுமை, குறைந்த வருமானம் பெற்ற குடும்பங்கள் நாட்டில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி விவசாயப் புரட்சியினால் அந்நிலையிலிருந்து மாற்றம் பெற்று தம்மை பலப்படுத்தி வரும் யுகம் இதுவாகும்.

இந்தியா, பாகிஸ்தான், வியட்நாம் என அலைந்த இந்த நாட்டு மக்களுக்கு அரிசி தேடிய யுகத்தை நாம் மறந்து விட முடியாது. அந்த நிலை மாற்றம் அடைந்து நாம் அரிசி, சோளம் போன்றவற்றில் தன்னிறைவு கண்டு அவற்றை



வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் யுகத்தை உருவாக்கியுள்ளோம்.

மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் கிழக்கிலுள்ள மாகாணங்கள் அபிவிருத்தியில் இணைந்து செயறபடுவதால் அதன பிரதிபலனை நாடு பெற்று வருவதையும் குறிப்பிட முடியும்.

விவசாயம், மின்சாரம், அதிவேக பாதைகள், குடிநீர், துறைமுகங்கள் என அபிவிருத்தி இடம்பெறும் போது அதன் பிரதிபலன் மக்களுக்குக் கிடைத்து வருகின்றது. கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் வேலை வாய்ப்பின்மை ஆறு வீதமாகக் குறைந்துள்ளது. எமது எதிர்கால சந்ததி மீது எமக்கு மிகுந்த நம்பிக்கையுள்ளது.

இனவாதத்தை தூண்டிவிட்டு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. நாடு என்ற ரீதியில் அனைவரும் இணைந்து இதனைக் கட்டியெழுப்ப வேண்டும்.

பாடசாலைகளுக்குச் செல்ல பிள்ளைகளுக்கு சுதந்திரம் இருக்கவில்லை. இப்போது அந்த நிலை மாறி கல்வியில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் திறமைகள் உள்நாட்டில் மட்டுமன்றி எங்கும் வெளிப்பட்டு வருகின்றன.

பிள்ளைகளை கல்வியில் மட்டுமன்றி விளையாட்டிலும் ஊக்குவிக்க வேண்டும். உடற்பயிற்சி மிக அவசியமாகும். நீரிழிவு போன்ற நோய்கள் இவற்றின் மூலமே தவிர்க்கப்படும்.

சில குடும்பங்களில் பிள்ளைகள் விளையாடுவதில்லை. வியர்வை வெளிவருவதில்லை. உணவு உண்பது முதல் அனைத்தையும் தொலைக்காட்சிக்கு முன்னால் இருந்துகொண்டே செய்கின்றனர். பெற்றோர்கள் இதில் அதிக கவனம் செலுத்துவது முக்கியமாகும் என்றார். (அ-2)

## இந்திய கடல் எல்லையில் மீன்பிடிக்க வேண்டாம்

### இலங்கை மீனவர்களுக்கு அறிவுரை

(சென்னை)

இந்திய கடல் எல்லையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு மீன்பிடி மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சு இலங்கை மீனவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைதாகியுள்ளனர்.

அவர்களை நாட்டுக்கு மீள அழைத்துவர இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மாலைதீவு கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபடுவது குறித்து பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக அமைச்சு கூறியுள்ளது.

அதனால் இந்திய எல்லையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என இலங்கை மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# கருக்கலைப்பு ஆபத்தானது

கர்ப்பம் தரிப்பது, தாய்மைப் பேறு அடைவது ஒரு பெண்ணிற்கு கிடைத்திடும் சுகங்களில் ஒன்று. அந்த சுகத்துடன் பல்வேறு கனவுகளுடனும் கற்பனைகளுடனும் கருவை சுமக்கும்போது அது. சிலருக்கு கலைந்து சிதறும் நிலை ஏற்படுவதும் உண்டு.

கர்ப்பப்பையில் கருதரித்த கரு 28 வாரங்களுக்குள் கலைந்து கர்ப்பப்பையை விட்டு வெளியேறுவதைத்தான் கருச்சிதைவு என்பர.

பொதுவாக கருச்சிதைவு இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படலாம். செயற்கையாக மேற்கொள்பவை ஆபத்தான விளைவுகளை சில வேளைகளில் ஏற்படுத்துவதும் உண்டு. இவை சட்டரீதியற்ற முறையிலும் நிகழ்கிறது.

கருச்சிதைவின் அறிகுறி வெவ்வேறு வகைகளில் ஏற்படுகிறது. முதலாவதாக கர்ப்பிணிப் பெண்ணிற்கு அடிவயிற்றில் வலி ஏற்படுவதுடன் இரத்தப்போக்கும் அவ்வப்போது சிறு துளிகளாக வெளிப்படும். இது மூன்று மாதங்களுக்குள் ஏற்படும். ஆனால் இந்த நிலையில் மருத்துவரை உடனடியாக அணுகுதல் சிறந்ததாகும்.

சிலருக்கு வயிற்று வலி இன்றி இரத்தப்போக்கு மட்டும் ஏற்படுவது உண்டு. குடும்பத்தில் ஒரு சில பெண்களுக்கு கர்ப்ப நிலையிலேயே முதல் சில மாதங்களுக்கு இரத்தப்போக்கு இருப்பதுண்டு. அந்த நிலையிலும் மருத்துவரை உடனே அணுகுதல் சிறந்தது. கர்ப்பிணிப் பெண்களில் அதிகமானோர் உணர்ச்சிவசப்படுவதும், கவலை மற்றும் அதிக சந்தோஷம் ஆகிய நிலைகளில் உணர்வுகளுக்கு ஆளாகும் போதும் உடல் நெகிழ்வதாலும் கருக்கலைய வாய்ப்புண்டு.

இதை தவிர்க்க மனம் அமைதிப்படல் வேண்டும். குறிப்பாக மனஅழுத்தத்தை (டென்ஷன்) குறைத்து ஓய்வாக இருக்க வேண்டும். அதுவும் முடியாத பட்சத்தில் மருத்துவ ஆலோசனையோடு ஓய்விற்கு மருந்து எடுக்கலாம்.

இன்னும் சில கர்ப்பிணிப் பெண்களுக்கு அடிவயிற்றில் தாங்க முடியாத வலி ஏற்படுவதுண்டு. இரத்தப்போக்கும் ஏற்படும். பரிசோதித்து பார்த்தால் கர்ப்பப்பையின் வாய்ப்பகுதி திறந்திருக்கும். எப்பொழுது கர்ப்பப்பை வாய் திறந்து விட்டதோ அதற்கு மேல் கருகலைந்து வெளியேறுவதை கட்டுப்படுத்த இயலாத நிலை உருவாகிவிடும். இவ்வேளையில் தாமதியாமல்




மருத்துவரை அணுக வேண்டும்.

பெரும்பாலான இடங்களில் குறிப்பாக மலைப் பிரதேசங்களில் அதிலும் பின்தங்கிய இடங்களில் உள்ள வயது மூத்த பெண்மணிகளின் துணையுடன் இவ்வாறான கருக்கலைப்பு, கலைந்த கருவினை வெளியேற்றல் போன்றவற்றை செய்கின்றனர். இது முற்றிலும் தவறான செயல். இவ்வாறு செய்வதால் சில வேளையில் தாயின் உயிருக்கும் ஆபத்து ஏற்படும்.

அத்தோடுபோதிய சுகாதார இன்மை காரணத்தினால் வேறு தொற்றுக்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. பெரும்பாலும் இவர்கள் ஆயுதமாக கைகளையே பயன்படுத்துவர். இது அனைத்தும் தவறான வழிகள்.

அதோடு 28 வாரத்திற்குள் வயிற்றில் சிதைந்த கருவினை முற்றிலுமாக வெளியேற்றிவிட வேண்டும். இல்லாவிடில் அந்த சிறு பகுதி கூட வேறு தொற்றுக்களை ஏற்படுத்தக்கூடும். அதனால் தான் மருத்துவரின் உதவியுடன் கருச்சிதைவினை அகற்ற வேண்டும். தொடர்ந்து ஏற்படும் இரத்தப்போக்கினால் இரத்தச்சோகை ஏற்படவும் வாய்ப்புண்டு. எனவே, உடன் கலைந்த கருவை முழுவதுமாக வெளியேற்றுவது தான் ஒரே சிறந்த வழி.

இது பொதுவாக சிகிச்சைக்கேற்றவாறு மருந்து கொடுத்தோ லேசான மயக்கத்திலோ சிகிச்சை அளிக்கப்படும். தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு இரத்தச்சோகைக்கான மருந்துக்களை உட்கொள்ள வேண்டும். கருச்சிதைவுக்குப் பின்னர்ஒரு மாதத்திற்கு ஆரோககியமான நிலை உருவாகும் வரை அப்பெண் ஓய்வெடுக்க வேண்டும். குறைந்தது மூன்று மாதங்களுக்காவது மீண்டும் கர்ப்பம் அடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதனை முழுமையாக பின்பற்றினால் அடுத்த கர்ப்பம் தரிக்கும் போது எந்தவித பிரச்சினைகளும் ஏற்படாது நாம் நம்மை பாதுகாத்துக்கொள்ளலாம்.

**ஆண்டுக்கு 68 ஆயிரம் பெண்கள் பலி!**

இன்று உலக நாடுகளில் காணப்படும் பிரச்சினைகளில் ஒன்று பாதுகாப்பற்ற உறவுகள். அதனால் ஏற்படும் பாதுகாப்பற்ற கருக்கலைப்பு ஆகும். பாதுகாப்பற்ற கருக்கலைப்பால் ஆண்டுதோறும் 68 ஆயிரம் பெண்கள் இறந்து கொண்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது.

மேலும் உலகமெங்கும் சுமார் ஐந்து கோடி பெண்கள் சரியான கருத்தடை சாதனங்கள் உபயோகிக்காததால் கருத்தரிக்கின்றனர் எனவும், கூடவே இரண்டரை கோடி பெண்கள் கருத்தடை சாதனங்களின் தோல்வியால் கருத்தரிக்கின்றனர் எனவும் திகைப்பூட்டும் தகவல்களை அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

கருக்கலைப்பில் ஒரு சிசு கொலை செய்யப்படுகிறது. அத்தோடு தாயின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி கருக்கலைப்பு செய்வதால் பெண்களின் உடல்நிலை பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாவதுடன் கிருமிகள் தொற்று, மலட்டுத்தன்மை ஆகியவை இதனால் உண்



டாகும் முக்கிய பாதிப்புகள் ஆகும்.

இதேவேளை ஒவ்வொரு முறை கருக்கலைப்பு செய்யும்போதும் கருப்பை பத்து சதவீதம் பாதிப்படைகிறது என்பது அதிர்ச்சியூட்டும் தகவலாகும்.

முழுமை பெறாத கருக்கலைப்பு செய்யப்படும்போது கருப்பையில் சில கருத்துகள்கள் தங்கிவிடுகின்றன. கடுமையான இரத்தப் போக்கு, தாள முடியாத வலி, மாதவிடாய் வெளியேறம் பகுதியில் கட்டி அல்லது கோழை வெளியேற்றம், காய்ச்சல், மயக்கம், நாற்றம் ஆகிய அறிகுறிகள் முழுமையற்ற கருக்கலைப்பை உணர்த்தும். அப்படி நேர்ந்தால் தாமதிக்காமல் கருப்பையை சுத்தம் செய்ய வேண்டும். கருக்கலைப்புக்கு எப்போதும் தேர்ந்த மருத்துவரின் உதவியை சட்ட ரீதியாக அணுகுவதே சிறந்ததாகும்.

**கருக்கலைப்பு தவறு; ஏன்?**

தன் குட்டியைத் தானே தின்னும் நாய், பாம்பு பற்றி கேள்விப்படுகிறோம். அவை எல்லாம் புலால் உண்பவை.

ஆனால் தன் வயிற்றுக் குழந்தையை பிறக்கும் முன் தானே கொல்லும் கொடூர தாயைப் பற்றி கேள்விப்படுகிறோம். இப்போது! இனி அம்மா என்று யாரை அழைப்பது?

கருக்கலைப்பு சாதாரண அறுவைச் சிகிச்சை அன்று. அது திட்டமிட்டு செய்யும் மனிதக் கொலை!

கருக்கலைப்பு செய்யும் பெண்களில் 33 சதவீதம் மீண்டும் குழந்தை பெற முடிவதில்லை!

கருக்கலைப்பு செய்யும் பெண்களில் 30 சதவீதம் மன நோய்க்கு இரையாகி வாழ்வை இழக்கின்றனர்!

பெரிய உயிரைக் காக்க சிறிய உயிரைக் கொல்லுதல் கருச்சிதைவு என்பது தவறு! உயிரில் பெரியது சிறியது என்பது இல்லை!


இன்று கொலை செய்யப்படுவது குழந்தையல்ல! அது நாளைய ஞானி, விஞ்ஞானி, வழிகாட்டும் தலைவன், தலைவி, கவிஞன், சிந்தனையாளன், சிறந்த படைத்தலைவன் என்பதை நினைவில் கொள்க!

ஆரோக்கியமான உடல்தான் இனிமையான வாழ்க்கைக்கு அடித்தளம். பெண்கள் நலமாக இருந்தால்தான் குடும்பம் நலமாக இருக்கும் உணர்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த சிந்தனையை வடக்கு ஏற்கவில்லை

வடக்கு மாகாணசபை தெரிவு செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் தான் முடிந்துள்ள நிலையில், அதிகாரப் பகிர்வு குறித்த கேள்விகளும், விசனங்களும் புதிய நிர்வாகத்திடம் தோன்றியுள்ளன. காரணம், வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றிய இந்த இரண்டு மாதங்களில், ஆளுநரின் எல்லையை மீறி, மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை மீறி எதையும் சாதிக்க முடியாத நிலையே காணப்படுகிறது. மத்திய அரசாங்கத்துடன், விரோதப் போக்கைக் கடைப்பிடிக்காமல் இணக்கப் போக்குடன் செயற்படுவதன் மூலமே, மாகாண நிர்வாகத்தின் இலக்குகளை அடைய முடியும் என்றும், நல்லிணக்கச் சூழலை உருவாக்க முடியும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவு தவறான விளைவுகளையே இதுவரை கொடுத்துள்ளது.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் காணப்பட்ட பலத்த கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியிலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில், நீதியரசர் விக்கினேஸ்வரன் முதலமைச்சராகப் பதவியேற்றிருந்தார். இதனால், ஒன்றேகால் இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்ற அவரையே, ஒரு பகுதியினர் தூற்றவும் செய்தனர். ஆனால், அவரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமையும் தமது முடிவில் உறுதியைக் கடைப்பித்ததற்கு காரணம், வடக்கு மாகாண சபையை சுமுகமாக, மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டு நடத்த வேண்டும் என்பதே.

ஏனென்றால், 13-வது திருத்தச் சட்டம் ஒரு ஓட்டைப் பாத்திரம் என்று முதல்வர் விக்னேஸ்வரன் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்.

மாகாணசபைகளின் அதிகாரங்கள் எந்தளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை என்பதை, ஒரு முன்னாள் நீதியரசரான அவர், புரிந்து கொள்ளாதவராக இருக்கவில்லை. எனவே தான், மத்திய அரசுடன் முரண்போக்கிலன்றி, இணக்கப் போக்குடன் செயற்படும் முடிவை எடுத்திருந்தார். ஆனால், வடக்கு மாகாண சபையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் அளவுக்கு மத்திய அரசோ, அதைச் சார்ந்த நிர்வாக கட்டமைப்புகளோ, இணக்கப்போக்குடன் செயற்படவில்லை. அதுமட்டுமன்றி, வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகளை முடக்கவும், நிர்வாகத்தைச் சிறுமைப் படுத்தவுமே இந்த இரண்டு மாதகாலப் பகுதியிலும் முயற்சிகள் எடுக்கப் பட்டன.

வடக்கிற்கு ஒரு இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநர் தேவையில்லை என்று, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மூலமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேரடியாக ஜனாதிபதியிடமும், கோரிக்கைகளை விடுத்தும் இன்னமும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முதலமைச்சர் விக்னேஸ்வரன் முதலாவது மாகாணசபை அமர்வில் நிகழ்த்திய உரையிலும் இதனை சுட்டிக் காட்டியிருந்தார். இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநருக்குப் பதிலாக, சிவில் ஆளுநர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானமும் வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனாலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதற்கு செவி சாய்ப் பதாகத் தெரியவில்லை.

மேஜர் ஜெனரல் சந்திரசிறியை ஆளுநர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக அரசாங்கம் நியமிக்கவுள்ளதாக செய்திகள் வெளியான போதிலும், அது நடைமுறைக்கு வரவில்லை. இந்த நிலையில் ஆளுநர் சந்திரசிறி, வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்துடன், முரண்போக்குடன் செயற்படத் தொடங்கியுள்ளார். தன்னை பதவியிலிருந்து அகற்றக் கோரும் வடக்கு மாகாணசபை நிர்வாகத்தை பழிதீர்க்கும் வகையில் அவர் அவ்வாறு செயற்படுகிறாரோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு அவரது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

வடக்கு மாகாண முதல்வரினதும், அமைச்சுக்களினதும் செயலாளர்களை அடிக்கடி மாற்றி குறுகிய காலத்துக்குள்ளேயே அவர் ஒரு காட்டு தர்பார் நடத்தத் தொடங்கி விட்டார். வடக்கு மாகாணசபையின் புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பின்னர், மாகாண கடற்றொழில் அமைச்சு இதுவரை மூன்று செயலர்களை கண்டுள்ளது. முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயலாளராக இருந்த அதிகாரி மாற்றப்பட்டு, மற்றொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறுகிய காலத்துக்குள் நிகழ்த்தப் பட்ட இந்த மாற்றங்கள், நிச்சயமாக நிர்வாக வசதிக்குறைவினாலோ, தகுதிக் குறைபாடுகளினாலோ இடம் பெற்றதாகக் கொள்ளமுடியாது. ஏனென்றால், குறிப்பிட்ட அந்த அதிகாரிகள் தான், இன்னமும் மாகாணசபைக்குள் முக்கிய பொறுப்புகளில் உள்ளனர்.

ஆனாலும், ஆளுநர் அடிக்கடி செயலாளர்களை மாற்றி, காட்டுகின்ற விளையாட்டின் உட்பொருள், தான் நினைத்தால் எதையும் செய்ய முடியும் என்பதே.

முதலமைச்சரினது செயலாளரை மாற்றிய போதும், கடற்றொழில் அமைச்சின் இரண்டு செயலர்களை மாற்றிய போதும், மாகாண முதல்வருடனோ, குறிப்பிட்ட அமைச்சருடனோ, ஆளுநர் சந்திரசிறி ஆலோசனை நடத்தவில்லை. இது தான்தோன்றித்தனமான அவரது செயலை மேலும் வெளிச்சம்போட்டுக் காட்டியது.

மாகாணசபைகள் சட்டத்தின்படி, அதிகாரிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் என்று, எல்லா அதிகாரங்களுமே, ஆளுனரின் கையில்தான் உள்ளது. ஆனால், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில்தான் அவர் அதனைச் செய்யலாம். இந்த விடயத்தில் மாகாண சபை பொதுச்சேவை ஆணைக் குழுவின் ஆலோசனையை அல்லது பரிந்துரையை ஆளுநர் பெற்றுக் கொண்டாரா என்பது முக்கியமான கேள்வியாக உள்ளது. என்னதான் அதிகாரம் ஆளுநரின் கைகளில் இருந்தாலும், அதிகாரிகளை மாற்றம் செய்வது தொடர்பாக ஒரு ஆலோசனையை முதலமைச்சருடன் நடத்துவதுதான் பண்பு. அத்தகைய பண்பை ஆளுநர் சந்திரசிறி கடைப்பிடித்திருக்கவில்லை.

மாகாணசபையில் ஆளுநர் சம்பிரதாயபூர்வமான உரையை நிகழ்த்தச் சென்றிருந்த போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவான ஒருசில உறுப்பினர்கள், வெளிநடப்புச் செய்து எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இதேபோன்று முதலமைச்சரும், ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் நடந்துகொண்டிருந்திருந்தால், ஆளுநரால் மாகாணசபையில் உரை நிகழ்த்தியிருக்க முடியாது. ஆனால், வடக்கிற்கு இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநர் தேவையில்லை என்று நிராகரித்தபோதிலும், ஆளுநரின் உரையை மாகாணசபை நிராகரிக்கவில்லை. அத்தகைய பண்பை ஆளுநர் கடைப்பிடிக்கத் தக்கவராக இல்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

கடந்தவாரம், மாகாண ஆளணி மீளாய்வுக் கூட்டத்தை ஆளுநர் சந்திரசிறி கூட்டியிருந்த போதிலும் அதுகுறித்து, மாகாண முதலமைச்சருக்கோ, அமைச்சர்களுக்கோ தெரியப்படுத்தப்படவில்லை.

அதிகாரமெல்லாம் கிடக்கட்டும், மாகாணசபைக்குள் என்ன நடக்கிறது என்றுகூடத் தெரியாதளவுக்கு ஆளுநரின் தலையீடுகள் சபை நிர்வாகத்தில் அதிகரித்துள்ளன. அதுமட்டுமன்றி, ஆளுநரினதும், அரசாங்கத்தினதும், ஏவலுக்குப் பணிந்து பழகிப்போன அதிகாரிகளும், வடக்குமாகாணசபையை மதித்து நடக்கும் போக்கை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆளுநர் தனது கொள்கைப் பிரகடன உரையில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு மாகாண முதலமைச்சரும், அந்தந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் மத்திய அரசின் அமைச்சரும் இணைத் தலைமை வகிப்பார்கள் என்று கூறியிருந்தார். அவரது உரை வெளியாகிப் பல நாட்களின் பின்னர், இணைத்தலைமை வகிக்க வேண்டிய முதலமைச்சருக்கு உரியவாறு தெரியப்படுத்தப்படாமல், அவரது ஒப்புதலைப் பெறாமலேயே, அரச அதிகாரிகள் யாழ்மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தனர்.

இந்தக் கூட்டம் முடிந்த பின்னர் தான், யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்படுவதாகவும், மகிந்த சிந்தனைகளை செயற்படுத்தும் பொறுப்பினை திறம்பட வழிநடத்துமாறும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

வடக்கில் உள்ள மக்கள் மகிந்த சிந்தனையை நிராகரித்துவிட்டே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தை தெரிவு செய்தனர். இந்த நிலையில், மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்துமாறு, அரசாங்கம் இட்ட கட்டளையை ஏற்க மறுத்துள்ளார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால், வடக்கு மாகாண சபையை அரசாங்கம் எப்படியெல்லாம் பழிதீர்க்கலாம் என்றே சிந்திக்கிறது என்பது புலப்படும்.

நல்லிணக்கத்துக்கான பச்சைக் கொடி காட்ட முயன்ற முதலமைச்சர் விக்னேஸ்வரனையும், அரசாங்கத்தின் எதேச்சாதிகாரம், கிள்ளுக்கீரையாகவே நினைத்துவிட்டது ஆச்சரியமானதல்ல. ஏனென்றால், தமிழர்கள் விடயத்தில் காலங்காலமாக சிங்கள இனவாத அரசாங்கங்கள் செய்து வந்தது இதனைத் தான். அந்த நிலை இன்னும் மாறவில்லை. அந்த நிலையை மாற்றுவதற்கான புறச்சூழல் உருவாகவில்லை என்பதே வடக்கு மாகாணசபைக்கு கொடுக்கப்படும் நெருக்கடிகள் உணர்த்தி நிற்கின்றன.

அரசாங்கம் அதிகாரங்களைக் கொடுக்காமல் வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்தை முடக்க நினைத்தாலும், ஓட்டைப்பாத்திரமான 13-வது திருத்தச் சட்டத்தின் மூலம், எல்லா அதிகாரங்களையும் வடிகட்டினாலும் கூட, சர்வதேச அங்கீகாரம் என்ற முக்கியமான பலத்தை வடக்கு மாகாண சபை குறுகிய காலத்துக்குள் பெற்றுள்ளது. இந்த அங்கீகாரத்தை அரசாங்கத்தினால் ஜீரணிக்க முடியவில்லை. மாகாணசபைகளுக்கு போதிய அதிகாரங்கள் கொடுக்கப் பட்டுள்ளதாக, கருதிக் கொண்டிருக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு, வடக்கு மாகாணசபையின் அதிகாரங்களை பிடுங்கும் முயற்சிகளைப் பார்க்கும் போதுதான், பல உண்மைகள் புரியத் தொடங்கும்.

இதற்கிடையே, சாவகச்சேரியில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய முதல்வர் விக்னேஸ்வரன், தற்போதைய அதிகார இழுபறிகள் குறித்து, வேதனையோடு சுட்டிக்காட்டியதுடன் மட்டும் நிற்கவில்லை. மக்களின் நன்மை கருதி கடைப்பிடித்து வரும் அமைதியை அல்லது பொறுமையை, தமது தளர்வு நிலை அல்லது பலவீனம் என்று தப்புக் கணக்குப் போடக்கூடாது என்றும் எச்சரித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்த தலைவரான அனுராவை வீழ்த்திய, மங்களவுக்கு தண்ணி காட்டிய, இந்தியாவின் கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டிக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்சவுக்கு தமிழ்த் தலைவர்களின் அதிகாரத்தை முடக்கும்அல்லது பிடுங்கும் நுட்பமா தெரியாது!

-தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விவகாரத்தை கனடா மனிதவுரிமை மையம் நுட்பத்துடன் கையாண்டது

(கொழும்பு)

**கனேடிய அரசு நிறுவனங்களிலுடன் இணைந்து ஏனைய நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பான விடயங்களிலும் பங்களிக்க வேண்டுமென கனேடியப் பிரதமர் விடுத்த வேண்டுகோளை தாங்கள் 2014 ஆம் ஆண்டிற்கான முக்கிய திட்டமாகப் பரிசீலிக்கவுள்ளதாக கனேடிய மனிதவுரிமை மையம் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பான விடயங்களை கனேடிய அரசிற்கும் கனடாவின் இதர கட்சிகளிற்கும் துறைசார் நிபுணத்துவத்துடன் எடுத்து தெம்பிவரும் கனேடிய மனிதவுரிமை மையம் 2013ஆம் வருட இறுதிக்கான அரசியலாளர்களுடனான ஒன்றுகூடலை டிசெம்பர் 6ஆம் திகதி நடத்தியிருந்தது.

இதன்போதே கனேடியப் பிரதமர், கடந்த சில மாதங்களிற்கு முன்னர் கனேடிய மனிதவுரிமை மையத்திற்கு வழங்கியிருந்த வாழ்த்துச் செய்தியில், கனேடிய மனிதவுரிமை மையமானது ஏனைய நாடுகளில் இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பான விவகாரங்களில் கனேடிய அரச நிறுவனங்களுடன் இணைந்து பங்காளராகப் பணியாற்ற வேண்டும் என்ற கனேடியப் பிரதமரின் அபிலாசையை செயற்றிட்டமாக்குவது என்ற முடிவு வெளியிடப்பட்டது.

ஈழத்தமிழர் விவகாரத்தை நுட்பத்துடன் கையாளும் கனேடிய மனிதவுரிமை மையத்தின் செயற்பாட்டாளர்களாக கனேடிய தேசிய நீரோட்டத்தை சேர்ந்த பலர் பணியாற்றி வருவதும், கனேடிய மனிதவுரிமை மையத்தின் நிகழ்வுகளிற்கே அதிகளவில் கனேடிய அரசியலாளர்கள் ரொறன்ரோ மாநகரிற்கு வந்து பங்குகொள்வதும் இடம்பெற்று வருகிறது.

கனேடிய தமிழர்களிடம் அமைப்பு ரீதியாக அணுகக்கூடிய ஒரு நடுநிலைக் கட்டமைப்பாக அடையாளம் காணப்பட்டுள்ள கனேடிய மனிதவுரிமை மையத்தினை, கனடாவின் ஆளும் கட்சி கனேடியப் பிரதமர் பொதுநலவாய மாநாட்டில் பங்குகொள்வது உகந்ததா, இல்லையா என்பதைக் கண்டறியும் கருத்துக் கணிப்பை நடத்தும் பணியை ஒப்படைத்தபோது கனேடிய மனிதவுரிமை நேர்த்தியாகவும் அனுபவ முதிர்ச்சியுடனும் கையாண்ட விதம் இந்த அமைப்பு மீது அரசியலாளர்களுக்கிருந்த மதிப்பை உயர்த்தியிருந்தது.

2014ஆம் ஆண்டில் கனேடியத் தமிழ் அமைப்புக்களின் சகல பிரதிநிதிகளையும் மற்றும் சிறந்த துறைசார் வல்லுநர்களையும் இணைத்த குழுவொன்றை உருவாக்கி அவர்களை இலங்கை விவகாரங்கள் தொடர்பான மற்றும் கனடாவில் வாழும் தமிழ் மக்களுக்கான அரசு சார்ந்த முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் ஒரு குழுவாக செயலாற்ற வைப்பதென்றும் 2014ஆம் ஆண்டில் கனேடிய மனிதவுரிமை மையம் தங்களது சேவைகளை ஏனைய நாடுகள் சார்ந்த விடயங்களிலும் ஈடுபடுத்துவதென்றும் இந்த தேவைகளுக்காக ஏனைய நாடுகளிலுள்ள மனிதவுரிமை விரும்பிகளையும் தங்களுடன் இணைத்து கொள்வதென்றும் கனேடிய மனிதவுரிமை முடிவு செய்துள்ளது.

இந்த விவகாரத்தில் தங்களுடன் இணைந்து செயலாற்ற விரும்பும் ஏனைய நாடுகளிலுள்ள அமைப்புக்களையும், துறைசார் நிபுணர்கள் மற்றும் தனிநபர்களையும் info@chrv.ca என்ற முகவரியினூடாக தங்களைத் தொடர்பு கொள்ளுமாறு கனேடிய ' மனிதவுரிமை மையம் வேண்டி நிற்கிறது. (அ-2)



நீண்ட காலமாக புரனமைக்கப்படாமல் இருந்த கோப்பாய் கந்தன் காடு இந்து மயானம் கனடாவில் உள்ள கோப்பாய் அபிவிருத்திச் சங்கத்தின் நிதியுதவியுடன் அண்மையில் புரனமைப்புச் செய்யப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# நாட்டில் பலவீனமான வெளியுறவுக் கொள்கை

## சுமந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வரலாற்றில் மிகவும் பலவீனமான வெளியுறவுக் கொள்கைகளைக் கொண்டதே தற்போதைய அரசாங்கம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் எதிர்பார்த்தளவு நன்மைகள் அரசாங்கத்திற்கு கிடைக்கவில்லை.

போர் இடம்பெற்ற காலத்தில் தமிழ் சிங்கள மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டன.

இது தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

போர்க் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் புதிய இணக்கப்பாடு

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்கள் தொடர்பான ஒப்பந்தத்தை தயாரிப்பது தொடர்பில் புதிய இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் பணியாற்றுவதற்காக பணியாளர்களை அனுப்பும் 6 ஆசிய நாடுகள் மற்றும் 6 மத்திய கிழக்கு இராச்சியங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது, இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் உலக தொழில் அமைப்பு, ஐக்கிய நாடுகளின் மகளிர் விவகார காரியாலயம் மற்றும் சர்வதேச குடிவரவு அமைப்பு ஆகியனவும் பங்கேற்றிருந்தன.

குறிப்பாக மத்திய கிழக்கு வீட்டுப்பணிகளுக்காக செல்லும் பணியாளர்களின் சேவை நிலைமைகள் மற்றும் கடைப்பிடிக்கப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளது.

புதிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் சர்வதேச தொழில் சட்டங்களுக்கு அமைவாக குறித்த நாடுகளின் தொழிலாளர் கொள்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். (அ-2)

# மன்னாரில் இரண்டு இந்தியர்கள் கைது

மன்னாரில் சுற்றுலா விசாவில் வந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இரண்டு இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னாரில் வைத்து நேற்று முன்தினம் மாலை இவர்கள் கைது செய்யப்பட்டதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இலங்கையில் கிருமிநாசினி பாவனை எட்டு மடங்காக அதிகரித்துள்ளது

## உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டு

ஆசியப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் கிருமி நாசினிப் பாவனை எட்டு மடங்கு அதிகமாகக் காணப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக் காட்டியுள்ளது.

தேவையற்ற கிருமி நாசினிப் பாவனை காரணமாகவே சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நீரிழிவு, புற்றுநோய்போன்ற நோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும் இக்கிருமி நாசினி பாவனையே காரணம். அதனால் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மாத்திரமல்லாமல் முழு நாட்டிலும் சிறுநீரக நோய்க்கு உள்ளாகக் கூடிய அச்சுறுத்தலுக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நாட்டில் சிறுநீரக நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது தொடர்பாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நிதி அமைச்சு, நீர் வழங்கல் வடிகாலமைப்பு ஆகிய அமைச்சுகளின் அதிகாரிகள் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகள், துறைசார் புத்திஜீவிகள் ஆகியோர் பங்குபற்றிய கலந்துரையாடலொன்று கொழும்பில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின் போதே மேற்படி விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

இதேவேளை நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைச்சுக்கு இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை பயன்படுத்தி வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு இக் கலந்துரையாடலின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது என்று டாக்டர் அனுருத்த பாதெனிய கூறினார்.

அதே நேரம் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளபடி கிருமிநாசினிப் பாவனையால் அதிகரித்து வரும் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான ஆரம்பக் கொள்கை வரவைச் சுகாதார அமைச்சின் ஊடாக தயாரிப்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்களில் 15 வீதமானோர் சிறு நீரக நோயாளர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாடெங்கிலும் சுமார் 25 ஆயிரம் சிறுநீரக நோயாளர்கள் இருப்பதாகவும், இவர்களில் நாளொன்றுக்கு 13 பேர் உயிரிழப்பதாகத் தெரிய வருவதாகவும் டாக்டர் பாதெனிய மேலும் கூறினார். (அ-2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.திருமதி. இரத்தின ஐயர் சுந்தரேஸ்வரக் குருக்கள் தம்பதியரின் ஷஸ்டியப்த சாந்தி விழா



சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் மனிதப் பிறப்பின் மகிமையை அறிந்து தமது வாழ்வை வளமாக்கி சாதனையாளர் என உலகச் சைவத்தமிழ் மக்களால் போற்றப்படுபவர். மருதனார்மடம் அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஆதீனகர்த்தாவாக இருக்கும் இவரது மணிவிழா, ஆஞ்சநேயர் ஆலயத்தில் வெகுசிறப்பாக இன்று நடைபெறுகின்றது.

உசன் கந்தசுவாமி கோவிலையும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தையும் மையப்படுத்திய பல்வளங்களும் நிரம்பிய திருவூராம் உசனில் இரத்தினசபாபதி ஐயருக்கும் சங்கரி அம்மாவுக்கும் பிள்ளையாக 1951.11.16 ஆம் திகதி பிறந்தார். பெயருக்கேற்ற தெய்வீகத் தோற்றம், புன்முறுவல் கொண்ட முகம், அன்பும் பண்பும் அறிவும் குருபக்தியும் இவரது தனித்துவமான அடையாளங்களாகும்.

ஆரம்ப இடைநிலைக்கல்வியை உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் குருத்துவக் கல்வியை வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பெற்றார். ஆரம்பத்தில் இவர் குருத்துவக் கல்லூரியில் நாட்டம் கொள்ளாது பாடசாலைக் கல்வியில் சங்கீதம், நாடகம், வயலின், மிருதங்கம் ஆகிய இசைத்துறையில் நாட்டங் கொண்டார்.

இத்துறையில்பரிசில்கள் பலவும் பெற்றார். தாயார் சங்கரி அம்மாவினதும் இவரது கல்விக் குருவாகிய அமரர் தங்கம்மா ஆசிரியரதும் வேண்டுதலால் குருத்துவக் கல்வியைப் படிப்பதில் கவனம் செலுத்தினார். இக்கல்வியை சீதாராம சாஸ்திரியார், சுப்பிரமணிய சாஸ்திரியார், நாராயண சாஸ்திரியார், மகாதேவக்குருக்கள், நாராயண உபாத்தியார் ஆகியோரிடம் பெற்றார். ஈழத்தில் பல ஆலயங்களின் கும்பாபிஷேக விழாவையும் உற்சவங்களையும் பிரதம சிவாச்சாரியாராகவிருந்து சிறப்புற நடத்தி வருகின்றார்.

குறிப்பாக உசன் கந்தசாமி கோவிலுக்கு 38 ஆண்டுகளுக்கு மேலாக பிரதம சிவாச்சாரியாராகவும் தர்மகர்த்தாவின் ஆலோசகராகவும் இருந்து வருகின்றார். இருபது ஆண்டுகளுக்கு மேல் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் பிரதம குருவாக இருந்துள்ளார். தென்மராட்சி கிழக்கில் உள்ள அத்தனை ஆலயங்களின் கும்பாபிஷேகங்களை இவரும் இவரது சகோதரர் சிவஸ்ரீ கேதீஸ்வரக் குருக்களும் சேர்ந்து நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக உசன் கஜகேணிப்பிள்ளையார், விடத்தற்பளை புதுக்குளத்துக் கண்ணகை அம்மன், வயற்கரை முருகன், வேம்பிராய்ப் பிள்ளையார், கரம்பகம் வீரபத்திரர் கோவில், கெற்பலி வீரபத்திரர் கோவில், முகமாலை பெரியதம்பிரான் கோவில் ஆகியவற்றுக்கும் இவரே பிரதம சிவாச்சாரியாராக இருந்து வருகின்றார்.

**ஆஞ்சநேய பக்தராக மாறியமை**

முகமாலை, எழுதுமட்டுவாழ், பெரியதம்பிரான் ஆலயத்துடன் 1967 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டுவரை நான்கு கும்பாபிஷேகத்துக்கு சுந்தரேஸ்வரக் குருக்களே பிரதம சிவாச்சாரியாராக கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் இவ்வாலயத்தில் உள்ள பரிவார மூர்த்திகளில் ஒன்றாகிய ஆஞ்சநேயரில் அதிக பக்தி உள்ளவராக மாறினார். இதனால்தானும் ஓர் ஆஞ்சநேயர் ஆலயத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டமிட்டார். அது எப்படி அவரால் முடிந்தது.

எண்ணியமுடித்தல் வேண்டும்
நல்லனவே எண்ணவேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்

என்பதே அவரது இதயகீதம், இலட்சிய வேட்கை, துணிவு, தெளிவு, அர்ப்பணிப்பு என்பவற்றைத் தாரக மந்திரங்களாகக் கொண்டு மருதனார்மடத்தில் பிரமாண்டமான ஓர் ஆஞ்சநேயர் ஆலயத்தை தாபித்தார். ஆரம்பத்தில் சிலர் விமர்சனம் செய்தார்கள்.

இன்று அவர்களும் அமைதியானார்கள். இக்கைங்கரியத்தின் மூலம் பல ஆயிரம் ஆஞ்சநேய பக்தர்கள் ஈழத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்து உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றார்கள். சுந்தரேஸ்வரக் குருக்கள் தன்னை உருவாக்கிய உசன் முருகன் கோவி லையும் தெல்லியூர் துர்க்காதேவி தேவஸ்தா னத்தையும் . அமரர் சிவத்தமிழ்ச்செல்வி தங் கம்மா அப்பாக்குட்டி அவர்களையும் நினைவு கூராத நாளே இல்லை எனலாம்.

முழுமையாக ஆலயங்களை அழகுபடுத்துவதோடு நில்லாது கல்வி, சமூகசேவைகளில் ஈடுபடுதல் காலத்தின் தேவை என்பதை இவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் செய்து காட்டிய பாதையில் தானும் செய்வதற்குரிய ஆயத்தங்கள் செய்து வருவது பாராட்டுதற்குரியது.

சுந்தரேஸ்வரக் குருக்கள் உயர்வடைவதற்கும் அவர்தம் பணியைச் சிறப்புற ஆற்றுவதற்கும் அவர்தம் பாரியார் சுந்தரமங்கேஸ்வரி அம்மா மனைத்தக்க மாண்புடையவளாக இருந்து பெரிதும் உதவி வருகின்றார். இவர்களது மணிவிழா சிறப்புற நடைபெறவும் தொடர்ந்து இவரது சேவை உயரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**க.பேரம்பலம்**
**(ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்)**
**தர்மகர்த்தா,**
**முகமாலை பெரிய தம்பிரான் ஆலயம்.**

# சம்பூரை மீட்டெடுப்பதற்கு பட்டினி கிடந்து சாகவும் தயாராகவுள்ளோம்

## சம்பந்தனிடம் சம்பூர் மக்கள் கோரிக்கை

(சம்பூர்)

எமது சொந்த இடமான சம்பூரை மீட்டுத் தாருங்கள். அதனை மீட்டெடுப்பதற்காக பட்டினியாக இருந்து சாவதற்கும் நாம் தயாராக உள்ளோம் என்று கட்டைப்பறிச்சான் முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ள சம்பூர் மக்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் கண்ணீர் விட்டு கதறிய முது உருக்கமாக வேண்டியுள்ளனர்.

சம்பூரை அண்மித்த பகுதியில் அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட மக்களை பார்வை இடுவதற்காகவும் முகாம்களிலுள்ள மக்களின் குறைபாடுகளை கேட்டறிவதற்காகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தமது குழுவினருடன் நேற்றுமுன்தினம் காலை அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இக்குழுவில் கிழக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் எஸ். தண்டாயுதபாணி, மாகாண சபை உறுப்பினர் கு. நாகேஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திருச்செல்வம் ஆகியோர் உடன் சென்றிருந்தனர்.

2006ஆம் ஆண்டு மாவிலாறு யுத்தத்தை தொடர்ந்து சம்பூர் கிழக்கு, மேற்கு மற்றும் ஏனைய கிராமங்களை சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து 2010ஆம் ஆண்டுக்குப் பினனர் கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித்திடல், கட்டைப்பறிச்சான் போன்ற இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பலர் மீள்குடியேற்றப்பட்ட போதும் சம்பூர், கிழக்கு மேற்கை சேர்ந்த மக்கள் தமது சொந்த நிலங்களிலேயே தாம் குடியேறுவோம் என்று போராடி வருகின்ற நிலையில் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியிருந்த சம்பூர் கிழக்கு, மேற்கு பிரதேசத்தில் அவர்கள் குடியேற்றப் படாமல் இன்றும் இடைத்தங்கல் முகாம்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# குரும்பை தலையில் வீழ்ந்ததில் 3 மாத குழந்தை உயிரிழப்பு

தென்னையிலிருந்து குரும்பை தலையில் வீழ்ந்ததில் 3 மாத கைக் குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் கல்முனை தமிழ் பிரிவிலுள்ள நற்பிட்டிமுனைக் கிராமத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது. அப்போது இந்த குழந்தையின் தாய் தனது குழந்தையை தோளில் தூக்கி போட்டவாறு பக்கத்து வீட்டிற்குச் சென்றுள்ளார்.

வீட்டிற்குஅருகில்இருந்ததென்னை மரத்திலிருந்து குரும்பை ஒன்று வீழ்ந்துள்ளது. வீழ்ந்த தென்னம் குரும்பை எதிர்பாராத விதமாக குழந்தையின் தலையில் வீழ்ந்துள்ளது.

உடனடியாக கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட குழந்தை அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது வழியிலே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

எதிர்பாராத விபத்தில் உயிரிழந்த மூன்று மாத பெண் குழந்தை குறித்த தம்பதியருக்கு பத்து வருட இடைவெளியில் பிறந்தது என தெரிய வருகின்றது. (அ-2)

## நீதிக் கட்டமைப்பில் மாற்றங்கள்

(கொழும்பு)

நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்யத் திட்டமிட்டுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதவான்களுக்கான ஒழுக்க விதிகள் மற்றும் நீதவான்களின் வினைத்திறன் மதிப்பீடு தொடர்பில் புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

பெங்களூர் நீதித்துறை ஒழுக்கவிதிகளின் அடிப்படையில் இலங்கையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

அத்துடன்நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஒன்றையும் அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் சட்டத்துறை கல்வி தொடர்பிலான கட்டமைப்பில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் (அ-2)

# நல்லிணக்க பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்துகிறதாம்

## சஜின்வாஸ் எம்.பி. கூறுகிறார்

பயங்கரவாதத்திற்கு இனி இடமில்லை என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பி னர் சஜின் வாஸ் குணவர் தன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்க இடமளிக்கப்பட மாட்டாது.

கற்றுக்கொண்ட பாடங் கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தி வருகின்றது.

இதனை தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

வாக்குகளை இழக்க நேரி டும் என்ற காரணத்தினால் இவ்வாறு ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

நாட்டு மக்களின் பௌதீக ஒருமைப்பாடு, தேசிய பொரு ளாதாரம் உள்ளிட்ட பல் வேறு விடயங்களை கருத் திற் கொண்டு அரசாங்கம் வெளியுறவுக் கொள்கை களை வகுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜெனீவா தீர்மானத்தை தோற்கடிக்க 59 மில்லியன் ரூபா செலவானது-பீரிஸ்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள்பேரவையில் இவ்வாண்டு கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை தோற்கடித்து, இலங்கையைக் காப்பாற்றுவதற்காக, ஜெனீவாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட குழுவுக்கு 59 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இத்தகவலை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்புக் கருதி, இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த உறுப்பினர்களின் விபரங்களை வெளியிட முடியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

"எமது முயற்சிக்கு பல தனிநபர்கள் ஆதரவளித்தனர். இப்போதும் ஆதரவளிக்கின்றனர்.

அந்தக் குழுக்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுவது அவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம் .

இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம் நியாயமற்றது என்பதை ஐ.நா மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளுக்கு விளக்க கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பல நாடுகளுக்கு நானே நேரில் சென்று வெளிவிவகார அமைச்சர்களை சந்தித்தேன். குறிப்பிட்ட நாடுகளின் தூதரகங்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டன.

இலங்கை ஜனாதிபதியின் சிறப்பு தூதுவர்கள் குறிப்பிட்ட நாடுகளின் தலைவர்களை சந்தித்து, வேண்டுகோள்களை விடுத்தனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.(அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நடவடிக்கை எடுப்பார்களா?



வவுனியா பிராந்திய வைத்திய அதிகாரி பணிமனையில் டெங்கு பரவும் அபாயம் உள்ளதாகவும் சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் வகையில் குப்பை கூழங்கள் காணப்படுவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஏ-9 வீதியும் மன்னார் வீதியும் சந்திக்கும் இடத்தில் வவுனியா நகரில் இருந்து 500 மீற்றர் தொலைவில் வவுனியா பிராந்திய வைத்திய அதிகாரி பணிமனை காணப்படுகின்றது. கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் சாதாரண பொதுமக்கள் என பலரும் தினமும் வந்து செல்கின்ற அலுவலகமாக இது இருந்து வருகின்றது.

தேசிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், வவுனியாவிலும் டெங்கு பரவும் அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டி டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் குறித்த அலுவலகமே செயற்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வீடுகளில் சாதாரணமாக நீர் தேங்கக் கூடிய வகையில் தாவரங்கள் நின்றால் கூட சிவப்பு நோட்டீஸ் ஒட்டி தண்டம் அறவிட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஆனால் குறித்த அலுவலகத்தில் நீர் தேங்கக் கூடிய பொருட்கள் பரவலாக காணப்படுவதுடன் வடிகாலும் நீர் வழிந்தோட முடியாது அடைபட்டு காணப்படுகின்றது.

இதனால் இங்கு நீர் தேங்கி டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது. இது தவிர இவ் அலுவலக கன்ரின் மற்றும் சுற்றுச் சூழலில் பரவலாக குப்பை கூழங்கள் காணப்படுகின்றன. இதனால் சுகாதாரம் சார் பிரச்சினைகளும் தொற்று நோய்களும் ஏற்பட கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

பொது மக்கள் வீடுகளில் தான் டெங்கு இருக்கும். சுகாதார அதிகாரிகள் பணிமனையில் டெங்கு இருக்காதா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-250)

# பேருந்தில் இருந்து தவறி விழுந்த நடத்துநர் சிகிச்சைக்காக அனுமதி

(கனகபுரம்)

பயணித்துக்கொண்டிருந்த இ.போ.ச பேருந்தில் இருந்து தவறி விழுந்த நடத்துநர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆனையிறவு சோதனைச்சாவடியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த இ.போ.ச பேருந்தில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நடத்துநர் தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மகேந்திரன் ஜெனார்த்தனன் (வயது29) என்ற நடத்துநரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-259)

# வவு.பூந்தோட்ட வீதியில் நடந்த பழைய மாணவர் சங்க கூட்டம்

(பூந்தோட்டம்)

பூந்தோட்டம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க கூட்டத்திற்கு பாடசாலையில் அதிபர் இடம்கொடுக்காமையால் வீதியில் கூட்டம் நடத்திய சம்பவமொன்று நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாகவும் பாடசாலையில் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படும் பல்வேறு குறைபாடுகள் தொடர்பாகவும் கலந்துரையடுவதற்காக பாடசாலையின் பழைய மாணவர்களால் பொதுக் கூட்டமொன்று நேற்று ஏற்பாடாகியிருந்தது.

இதற்கான கோரிக்கை பாடசாலை அதிபரிடம் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கோரிக்கை விடுத்து அதற்கான அனுமதியும் பெற்று நேற்று முன்தினம் கூட்டத்தினை நடத்த அதிபர் அனுமதியளித்திருந்தார்.

இதற்காக பாடசாலை கடடடத்தினை பயனபடுத்துமாறும் தெரிவித்திருந்த நிலையில் கூட்டம் ஆரம்பிப்பதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர் பாடசாலையின் வளாகத்திற்குள பழைய மாணவர்கள் செல்ல முடியாது எனவும் கூட்டம் நடத்துவதற்கு அனுமதிக்க முடியாது எனவும் பழைய மாணவர்களுக்கு அதிபர் அறிவித்துள்ளார் எனவும் பழைய மாணவர்கள் தெரிவித்தனர்.

எனினும் அனைவருக்கும் முன்கூட்டியே அறிவித்தல் வழங்கப்பட்டமையினால் பல பழைய மாணவர்கள் ஒன்று கூடியிருந்தமையினால் வீதியில் உடனடியாக கொட்டகை அமைக்கப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டதாக பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் எஸ். சோமகாந்தன் தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக பாடசாலை அதிபரை தொடர்பு கொண்ட முயறசிகள் பலனளிக்கவில்லை. (ம-250-266)

# வன்முறையை ஒழிக்கும் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் விழிப்புணர்வு பேரணி




(கிளிநொச்சி)

பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிக்கும் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் விழிப்புணர்வு பேரணி, வீதி நாடகம், கருத்துரைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முழு நாள் நிகழ்வாக நடைபெற்றன.

இவ் வருடம் கடந்த நவம்பர் 25 ஆம் திகதி முதல் இன்று வரையும பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிக்கும் வாரமாக நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக பாலியல் பலாத்காரம சார்ந்த விடயங்களை தாங்கிய ஊர்தி நாடெங்கும் பவனி வந்து கொண்டிருக்கிறது. இவ் ஊர்தி முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பரந்தன் வந்து நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வந்தது.

யாழ் கண்டி வீதி வழியாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு வந்த ஊர்தி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மகஜரைக் கையேற்ற மாவட்டச் செயலாளர் கூறுகையில், பெண்களுக்கெதிரான வன்முறையைத் தடுக்கும் இவ் ஊர்தி சமூகத்திற்கு நல்ல செய்தியைச் சொல்கிறது. எமது சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியைத் தட்டிக் கேட்கும் செய்தியை வழங்கும் இதுபோன்ற ஊர்திகள் காலத் தின் தேவையாக உள்ளது.

மனித குலத்தின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பும் செய்தியையும் இவ் ஊர்தியும், தெரு நாடகமும் சொல்கின்றது.

பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு பெண்கள் மட்டுமல்ல எல்லோருமே குரல் கொடுக்க வேண்டும். போராட வேண்டும் எனவும் கூறினார்.

மகஜரைக் கையேற்கும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவர் மாசிலாமணி ஜெயராஜா, மனித உரிமைகள் சட்டத்தரணி திருமதி சதீஸ்குமார் விஜயராணி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தெரு நாடகம் டிப்போ சந்தி உட்பட பல இடஙகளில் நடைபெற்றது. பல நூறு வரை யிலான பெண்கள் இதில் பங்கேற்றனர். (ம-254)

# வவு. தமிழ் மத்திய ம.வி 1000 பாடசாலை திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது

(வவுனியா)

வவுனியா தமிழ்மத்திய மகா வித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதாக பிரதி கல்வி அமைச்சர் மோகன்லால் கிரேரோ தெரிவித்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற உயர்கல்வி, கல்விச் சேவைகள், தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் இந்து விஞ்ஞான தொழில்நுட்பப் பிரிவுக்குள் உள்வாங்கப்பட்டாலும் துரதிர்ஷ்டவசமாக அது ஆயிரம் பாடசாலைத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படாத பாடசாலையாக கணிக்கப்படுவதால் இந்த தொழில்நுட்ப கல்வி வகுப்புக்களை அங்கு ஆரம்பிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அங்கு சுமார் 65 மாணவர்கள் இதற்கு தகைமை உடையவர்களாக இருந்த போதிலும் 1000 பாடசாலை திட்டத்துக்குள் அது உள்வாங்கப்படாத நிலைமையால் அந்த மாணவர்கள் துரதிர்ஷ்டவசமாக கலை, வர்த்தகப் பிரிவுகளுக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 200 மாணவர்களைக் கொண்ட அந்த மிகப்பெரிய பாடசாலைக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருப்பது வருத்தத்துக்குரியது.

இது விடயம் தொடர்பாக அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். இது தொடர்பாக அமைச்சர் உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். இன்று கல்வியமைச்சின் உயர் அதிகாரிகள் எல்லாம் இங்கு வந்திருக்கின்றார்கள். இது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி ஒரு முடிவை அறிவிக்க வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன் என உரையாற்றியிருந்தார்.

அதற்கு பதிலளித்து கடந்த 7 ஆம் திகதி உரையாற்றிய பிரதி கல்வி அமைச்சர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் இன்றைய தினமே எடுக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இதன்மூலம் அந்த பாடசாலை மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் உள்ளிட்ட ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் வருகின்ற எல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளது. குறிப்பாக 65 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தாங்கள் விரும்பிய தகவல் தொழில்நுட்ப பாடநெறியை தெரிவு செய்வதற்கான வாய்ப்பும் கிட்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-6)

# சமுர்த்தி வங்கிச்சங்கம் திறந்து வைப்பு


(பூந்தோட்டம்)

வவுனியா புளியங்குளத்தில் நேற்று சமுர்த்தி வங்கிச் சங்கம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அப்பகுதிக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டு சமுர்த்தி திட்டம் சிறப்பாக இடம்பெற்று வரும் நிலையில் இதுவரை காலமும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இயங்கி வந்த புளியங்குளம் வங்கிச் சங்கம் நேற்று புளியங்குளத்தில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

புதிதாக திறக்கப்பட்ட இவ் வங்கியை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க. பரந்தாமன் திறந்து வைத்திருந்ததுடன் இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் வீ. ஆயகுலன், பிரதேச செயலகத்தின் பிரதான கணக்காளர், பிரதம லிகிதர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் [illegible] பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-266)

# விபத்தில் ஆட்டோ சாரதி காயம்



(குருமன்காடு)

வவுனியா கற்குழி பகுதியில் ஆட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி காயமடைந்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி மாலை வவுனியா கற்குழி பகுதியில் இருந்து வேகமாக வந்த ஆட்டோ ஒன்று கண்டி வீதிக்கு திரும்ப முற்பட்ட வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே உள்ள மதிலுடன் மோதியதில் அதனை செலுத்திய சாரதி கன்னத்திலும் தலையிலும் காயமடைந்து தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டில்லியில் ஆட்சி அமைப்பதில் நெருக்கடி

டில்லியில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சிஅமைக்கத்தேவைபடும் பெரும்பான்மை பலம் எந்தக் கட்சிக்கும் கிடைக்கவில்லை. இதனால், ஆட்சி அமைப்பதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

மொத்தம் உள்ள 70 தொகுதிகளில் பாரதிய ஜனதா கட்சிக்கு 31 ஆம் ஆத்மிக்கு 28, காங்கிரசுக்கு 8, சிரோமணி அகாலி தளம், ஐக்கிய ஜனதா தளம், சுயேச்சை ஆகியோருக்கு தலா ஓர் இடம் கிடைத்தது.

அதிக இடங்கள் பெற்ற கட்சி என்ற அடிப்படையில் பாஜகவை துணைநிலை ஆளுநர் ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தாலும், அடுத்து வரும் நாட்களில் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய நெருக்கடி பாஜகவுக்கு ஏற்படும்.

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து ஐக்கிய ஜனதா தளம் அண்மையில் விலகி விடடதால், டில்லியில் ஓர் இடத்தில வெற்றி பெற்றுள்ள அக்கட்சி உறுப்பினரின் ஆதரவு பாஜகவுக்கு கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (2)

## சபை அமளியையடுத்து பாரா. ஒத்திவைப்பு

எதிர்க்கட்சிகள்தொடர்அமளியையடுத்து பாராளுமன்றம் நாள் முழுவதும்ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்றைய தினம் கூடியது. மக்களவையில் தெலுங்கு தேசம் எம்.பி.க்கள் தெலுங்கானா பிரச்சினையை கிளப்பினாரகள். விலைவாசி உயர்வு பற்றி பேச வேண்டும் என்று இடதுசாரி எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.ஒரே நேரத்தில் எல்லோரும் பேசியதால் சபையில் அமளி ஏற்பட்டது.

2 மணிக்கு அவை கூடிய போது, தெலுங்கானா எதிர்ப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து உறுப்பினர்கள் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்படையினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதற்கு அ.தி.மு.க. மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.இதனால் பாராளுமன றத்தின் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன. (2)




தாய்லாந்து நாட்டின் பாராளுமன்றத்திலிருந்து எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி இராஜினாமா செய்ததையடுத்து பாங்கொக்கில் அந்நாட்டு அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடைபெற்றதைப் படத்தில் காணலாம்.

# பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்த தயார்

## தாய்லாந்து பிரதமர் இணக்கம்



**தாய்லாந்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அடுத்த 60 தினங்களுக்குள் தேர்தலை நடத்துவதற்கு அந்நாட்டுப் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா இணக்கம் தெரிவித்துள்ளார்.**

யிங்லக் ஷினவத்ரா கடந்த 2011ஆம் ஆண்டு தாய்லாந்து பிரதமராகப் பதவியேற்றார். அவரது ஆட்சியில் ஊழல் பெருகிவிட்டதாக குற்றஞ்சாட்டியுள்ள எதிர்க்கட்சியினர்,

அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று கடந்த இரு வார காலமாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இந்தப் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு அடுத்த 60 நாட்களில் தேர்தலை நடத்தத் தயாராக இருப்பதாக பிரதமர் யிங்லக் ஷினவத்ரா நேற்று முன்தினம் அறிவித்தார்.

தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனினும், இதை எதிர்க்கட்சிகள் ஏற்காவிட்டால் அரசியல் நெருக்கடி தொடர்ந்து நீடிக்கும் என்று அவர் எச்சரித்தார்.

மேலும், நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் முடிவு செய்வதற்காக பொது வாக் கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே, மொத்தம் 500 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் இருந்து தனது 153 பாராளுமன்ற உறுப்பி னர்களும் இராஜினாமா செய்துள்ளதாக எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இதனால், நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்களை ஆளுங்கட்சி நிறைவேற்றுவது தடைப்படாது. எனினும், நாடாளுமன்றத்தின் சட்டபூர்வ தன்மை குறித்து கேள்வி எழும் என்று கருதப்படுகிறது.

இது குறித்து ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான அபிசித் வெஜ்ஜாஜிவா கூறுகையில்,

நாங்கள் நாடாளுமன்றத்தில் எங்கள் கடமையை சிறப்பான முறையில் செய்தோம். இதற்கு மேல் நாங்கள் எதுவும் செய்ய முடியாது.

நாடாளுமன்றத்தில் பெரும் பான்மையாக இருப்பவர்கள், நாட்டு மக்களுக்குத் துரோ கம் செய்வது எங்களை வருத்தமடையச் செய்துள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது என்பது மக்களுக்கு அதிகாரத்தைத் திருப்பியளிக்கும் ஒரு வழியாகும். ஆனால், அதைத் தொடர்ந்து நடத்தப்படும் தேர்தலில் மக்கள் நம்பிக்கை கொள்வதற்கு தீர்வு காணப்பட்டாக வேண்டும என்றார். (2)

## ஐ.நா. பிரதிநிதிகள் ஈரான் விஜயம்

ஐக்கிய நாடுகளின் அணு முகவர் அமைப்பின் பிரதிநிதிகள் ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

சர்ச்சைக்குரிய அணுத் திட்டம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ளும் நோக்கில் ஐநா விசேட பிரதிநிதிகள் அங்கு சென்றுள்ளனர்.

முக்கியமான அணு உலைகள் சிலவற்றையும் இதன் போது ஐநாவின் பிரதிநிதிகள் கண்காணிக்கவுள்ளனர்.

மேற்குலக நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையிலான அணுத்திட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் இந்த விஜயம் இடம்பெறுகின்றது.

ஈரானின் புதிய ஜனாதிபதியாக ஹசன் ரவ்ஹானி பதவியேற்றதன் பின்னர், அணுத்திட்டப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுளளது. (2)

## ஹசாரே உண்ணாவிரதம்



ஊழலுக்கு எதிராக வலுவான லோக்பால்மசோதாவை வலியுறுத்தி சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே இன்று முதல் காலவரையறையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட உள்ளார். இது குறித்து அவர் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது,

வலுவான லோக்பால் மசோதாவை நிறைவேற்றுவதாக மத்திய காங்கிரஸ் அரசு கூறியது. ஆனால் இந்த மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு துரோகம் செய்து விட்டது.

இந்த மசோதாவை பாராளுமன்றத்தின் குளிர் கால கூட்டத் தொடரில் நிறை வேற்ற கோரி இன்று முதல் கால வரையறையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுகிறேன்.

காங்கிரஸ்அரசுஉறுதிஅளித்ததை நிறைவேற் றாமல் மக்களுக்கு துரோகம் செய்து விட்டது. அதற்காக பெரிய விலையை பெற்று விட்டது என்றார். (2)

## உக்கிரமடைகின்றது உக்ரேன் போராட்டம்;

# ஜனாதிபதியை பதவிவிலக வலியுறுத்தி திரண்டனர் இரண்டு இலட்சம் மக்கள்

உக்ரேன் ஜனாதிபதி விக்டர் யனுனோவிச்சை பதவி விலக வலியுறுத்தி 2 இலட்சம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவ் ஆர்ப்பாட்டம் தலைநகர் கிவ்வில் நேற்று நடைபெற்றது.

சோவியத் ரஷ்யாவில் இருந்து பிரிந்து தனி நாடான உக்ரைனில் தற்போது விக்டர் யனுகோவியுச் ஜனாதிபதியாக உள்ளார். அவரது ஆட்சியில் இலஞ்ச, லாவண்யம் அதிகரித்து விட்டதாக புகார் எழுந்துள்ளது. மேலும்இவரை எதிர்க்கும் எதிர்க்கட்சி தலைவர்கள் கைது செய்யப்பட்டு






சிறையில் அடைக்கப்பட்டுள்ள னர்.

ரஷ்யாவின் தலைமையில் இயங்கும் "கஸ்டம்ஸ் யூனியன்" அமைப்பில் உக்ரைனை இணைக்க ஜனாதிபதி விளாடிமிர் புதினுடன் ஒப்பந்தம் செய்தார். இதற்கு எதிர்க்கட்சி மற்றும் பொது மக்கள் இடையே கடும் எதிரப்பு கிளம்பியுள்ளது.

எனவே பொதுமக்கள் யனுகோவியுச் பதவி விலக வலியுறுத்தி தலைநகர் கிவ்வில் போராட்டம் நடத்தினர். சிவ் நகரின் தெருக்களில் திரண்டு பேரணியாக சென்ற மக்கள் சுதந்திர தின சதுக்கத்தை சென்றடைந்தனர்.

பேரணியில் சென்றவர்கள் ஜனாதிபதிக்கு எதிரான கோஷங்கள் அடங்கிய அட்டைகளை கையில் ஏந்தி இருநதனர். எதிர்ப்பு கோஷங்களை முழங்கினர். போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த பேரணியில் 2 இலட்சத்துக்கும் மேற் பட்டோர் கலந்து கொண்டனர். அவர்களில் பெருமபாலானவர்கள் இளைஞர்கள் மற்றும் இளம்பெண் கள் ஆவர்.

அவர்கள் ஐரோப்பிய யூனியன் மற்றும் உக்ரைன் நாட்டின் கொடிகளை ஏந்தி போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

சுதந்திர தின சதுக்கத்தில் சோவியத் ரஷ்யாவின் கம்யூனிஸ்டு தலைவரான விளாடிமிர் லெனின் 11 அடி உயர சிலை கடந்த 70 ஆண்டுகளாக உள்ளது. அந்த சிலையை கயிறு கட்டி கீழே சாய்த்தனர். அதை முழுமையாக அகற்றவும் வலியுறுத்தினர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருக்கும் வாய்ப்புகளைத் திறம்பட பயன் படுத்துகிறவனே உண்மையான பெருமைக்கு சொந்தக்காரன்.

- தியோடர் ரூஸ்வெல்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மேன்மக்கட்பஞ்சம் தீராதவரை எங்களுக்கும் தீர்வு இல்லை

"...மேன்மக்கள் மேன் மக்களே" என்றார் ஔவையார். மேன்மக்கள் என்பதற்குள் ஔவையார் கண்டு கொண்ட பண்புடமை அற்புதமானது. அந்த அற்புதத்தை விளக்குவதற்காக சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்றார்.

உலகில் உள்ள எந்த அழகான பொருட்களை எரியூட்டினாலும் அவை கருகி சாம்பலாகி போகும். எரித்தல் என்ற செயற்பாட்டில் அழகு கெட்டுப் போதல் நடந்து முடிகின்றது.

ஆனால் வெண்மையாக இருக்கக் கூடிய சங்கு எரியூட்டப்பட்டாலும் தனது வெண்மையை இழப்பதில்லை.

வெண்மையான சங்கை எரியூட்டும் போது அது தூய வெண்பஷ்பமாக மாறிக் கொள்கிறது.

இதனாலேயே ஔவையார் தான் கூறவந்த மேன்மக்களின் உயர்ந்த குண இயல்பை சுட்டெரித்த சங்கின் வெண்குணத்திற்கு பொருத்திக் கொண்டார்.

உயர்ந்த பண்பும் பரோபகாரமும் கொண்ட மேன்மக்கள் எந்தக் கஷ்டம் ஏற்படுகின்ற போதிலும் தங்களின் உயர்ந்த குணத்தில் இருந்து இம்மியும் இறங்கியது கிடையாது.

அவர்களின் வாழ்வு என்பது நேர்மையும் தியாகமும் மற்றவர்களுக்காக வாழ்வதும் ஆகும். இதனாலேயே உலகில் வாழ்ந்த பெரும் தலைவர்கள் மேன்மக்களாக கணிக்கப்பட்டார்கள்.

இத்தகைய மேன்மக்கள் இல்லாத அரசாங்கமும் நாடும் உருப்பட்டதான வரலாறு கிடையாது. ஒரு அரசு என்பது மக்களின் துன்பங்களை களைவதாகவும் ஏழைமக்களின் வாழ்வை உயர்த்துவதாகவும் இருக்க வேண்டும்.

எல்லாச் சமயங்களும் எல்லா மொழிகளும் எல்லா இனங்களும் சமத்துவம் உடையவை. உலகில் இன, மத, நிற, மொழி என்பன வேறுபட்டவையாக இருப்பினும் மனிதம் என்பதில் எந்த வேறுபாட்டுக்கும் இடம் இருக்க முடியாது.

எனவே இன, மத, மொழிகளால் மனித சமூகத்தை பாகுபடுத்தும் கொடுஞ்செயலை மேன்மக்கள் ஒருபோதும் செய்யமாட்டார்கள்.

இன்று எங்கள் நாட்டில் இருக்கக்கூடிய பெரும் பஞ்சம் மேன்மக்களுக்கானதுதான். அதிலும் குறிப்பாக அரசியலில் மேன்மக்களுக்கு பெரும்பஞ்சமும் பற்றாக் குறையும் ஏற்பட்டு விட்டது.

அரசியலில் ஈடுபட்டோர் பொதுநலன் என்பதை தங்கள் சுயநலனாக மாற்றிவிட்டார்கள். இதன் காரணமாக பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய கிடைப்பனவுகள் ஒருசாராருக்கு போய்ச்சேர பொதுமக்கள் தம் வாழ்வாதாரத்துக்காக தினமும் ஏங்கும் அவலநிலை ஏற்படலாயிற்று.

இத்தகைய அரசியல் ஆளும் தரப்பிலே என்று எவரும் நினைத்துவிடக்கூடாது. மாறாக இந்த நாட்டில் கண்ணீரும் கம்பலையுமாக வாழுகின்ற தமிழ் மக்களின் அரசியல் தலைமையிலும் மேன்மக்கட்பஞ்சம் நிறையவே இருக்கின்றது.

ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் தலைமை என்பது உள்ளும் புறமும் நேர்மையீனத்தை கொண்டிருந்தால் அந்த இனம் நம்பிக் கெடுமேயன்றி வேறு எதனையும் பெற்றுக் கொள்ள மாட்டாதென்பது உறுதி.

# காலத்தால் அழியாத கவிஞர் மு.செல்லையா



வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்றவள்ளுவன்வாக்கிற்கு அமைய வாழ்ந்து காலத்தால் அழியாது தன் சுவடுகளால் வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞர் அல்வாயூர் முருகர் செல்லையா அவர்கள் 1906.10.07இல் அல்வாயூரில் முருகர் குஞ்சரம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

சிறுவயதிலிருந்தே கல்வியிலும் கலைகளிலும் நாட்டம் கொண்ட அவர் தனது 12ஆவது வயதினில் கரவை பண்டிதர் த.மயில்வாகனத்திடம் ஆரம்ப சைவ, இலக்கிய அறிவைப் பெற்றுக்கொண்டார்.

1927ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உயர்கல்வியைப் பெற்று 18 வயதில் முதற்தர சித்தியுடன் வெளியேறி தன் வாழ்க்கைப் பயணத்தை கல்விப் புலத்துடன் இணைத்துக்கொண்டார்.

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் 26 ஆண்டுகள் அதிபராக இருந்தார். அத்துடன் அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாசாலையை ஸ்தாபித்து 13 ஆண்டுகள் அதிபராக இருந்து அரும்பெரும் சேவையாற்றினார்.

தான்பிறந்த ஊரில் 1927ஆம் ஆண்டு மனோகரா நாமம் சூட்டி சன சமூகத்தை ஸ்தாபிதம் செய்து மங்களகரமான மஞ்சள், குங்கும நிறத்தையும் தெரிவு செய்தார். சமயத்தின் மேற்கொண்ட பற்றினால் அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையையும் ஸ்தாபித்தார்.

சைவசமய சமரச சங்கம், சைவ ஹரிஜன சபை போன்றன ஸ்தாபித்து சைவத்தை வளர்த்தார். 1940 ஆம் ஆண்டு அல்வாய் மனோகராகான சபாவையும் ஸ்தாபித்தார்.

## மறைந்தார் மாண்பு

இவரது வண்டுவிடு தூதையும் வளர்பிறை கவிதைத் தொகுப்பையும் அறியாதவர்களில்லை.

1930 இன் பிற்பகுதியிலிருந்தே கவிதைகளை உருவாக்கத் தொடங்கினார். இவரது கவிதைகளில் கற்பனைச் செறிவும் தேச பக்தியும் காந்தீய ஆர்வமும் சமூக முற்போக்கு சிந்தனையும் கொண்டவை.

இலங்கை வானொலி நடத்திய கவிதைப் போட்டியில் இவரது வண்டு விடு தூது தங்கப்பதக்கத்தைப் பெற்றது. இவரது கவிதைத் தொகுதி 1952 இல் வளர்பிறை என்ற நூலாக வெளிவந்து நவநீத கிருஷ்ண பாரதியார் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டு கவிஞர் பட்டமும் சூட்டப்பட்டார்.

வளர்பிறை கவிதைத் தொகுதி, புதிய வண்டுவிடு தூது, தேசிய கீதங்கள், சுகாதார சுலோகங்களும் கும்மியும், குமாரபுர குமரவேள் பதிகம், தங்கத் தமிழ் கண், கதிர்காமக் கந்தப் பெருமான் வேல் வெண்பா, முருகமூர்த்தி தோத்திரக் காரிகை, பாஷைப்பயிற்சி, கந்தவனத் தோத்திரக் காரிகை, செல்வச்சந்நிதி, வற்றாப்பளை, வேவிலந்தை கோயில் பாடல்கள், கவிதை வானிலே ஒரு வளர்பிறை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

இவர் பிறந்த வீட்டின் வீதி கவிஞர் செல்லையா வீதி என்ற நாமத்தோடும் சாமணந்தறை பிள்ளையார் ஆலயத்தில் கவிஞர் செல்லையா அரங்கு அமைக்கப்பட்டிருப்பதும் யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் செல்லையா மண்டபம், கவிஞர் நாடக மன்றம் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கவிஞர் 1966ஆம் ஆண்டு மார்கழி மாதம் 9 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

சங்கீத்தா கந்ததாசன்
அல்வாய்

# சேவல் சண்டை 12 பேர் கைது

பணத்தைப் பந்தயமாக வைத்து சேவல் சண்டை போட்டியை நடத்திய 12 பேரை வென்னப்புவ பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளார்.

வென்னப்புவ லுணுவில பண்டிரிப்பு பிரதேசத்தில் உள்ள தென்னந் தோட்டம் ஒன்றில் இந்த சேவல் சண்டை போட்டி நடத்தப்பட்டுள்ளது. போட்டியில் சேவல்களை சண்டையிட வைத்த 12 கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மினுவங்கொட, ஜா-எல, ஏக்கல ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் இவர்களில் செல்வந்த வர்த்தகர்களும் இருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மாரவில நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்தப்பட உள்ளனர். (செ-11)

# மனைவியை திருப்பியழைக்கக் கோரி கணவன் தற்கொலைக்கு முயற்சி

வெளிநாட்டில் பணிபுரிகின்ற தனது மனைவியை நாட்டுக்கு அழைத்துவருவதற்கு அதிகாரிகள் உரியநடவடிக்கை எடுக்கவில்லையெனக் கூறி அவரது கணவன் தற்கொலைக்கு முயன்ற சம்பவமொன்று பத்தரமுல்லையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.


பத்தரமுல்லையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு முன்பாகவே அவர் விஷமருந்தி தற்கொலை செய்துகொள்வதற்கு முயன்றுள்ளார். ஆபத்தான நிலையிலிருந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் புளியங்குளத்தைச் சேர்ந்த 38 வயதான நான்கு குழந்தைகளின் தந்தையான இந்திக பிரசாத் என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தன்னுடைய மனைவி சவூதி அரேபியாவில் தொழில்புரிவதாகவும் அங்கு அவர் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் அவரை உடனடியாக நாட்டுக்கு திரும்ப அழைத்துவருமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடம் அவர் கோரியுள்ளார்.

அவரை நாட்டுக்கு திருப்பி அழைப்பதாயின் மூன்றரை இலட்சம் ரூபா தேவையென வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்ததையடுத்தே அவர் தனது நான்கு குழந்தைகளுடன் பணியகத்திற்கு நேற்று வருகைதந்து தற் கொலைக்கு முயற்சித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி



இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை ஆயிரக்கணக்கில் எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமது சமயத்தினையும் சமய விழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்து மந்திரம் முதலீடு செய்யுமாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## வெற்றி வாழ்வுக்கான இரகசியம்



❖ நன்மை செய்யவும், நல்லவர்களாக வாழவும் விரும்புபவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

❖ உண்மை எதற்கும் தலை வணங்கத் தேவையில்லை. மனித சமூகம் தான் உண்மைக்குத் தலை வணங்க வேண்டும்.

❖ எல்லாவிதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது. அதை விழித்து எழச் செய்வதே நல்லாசிரியரின் கடமை.

❖ இன்றைய கல்வித்திட்டம் மனிதனை இயந்திரமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஒழுக்கம், மனவலிமை, பரந்த அறிவு இவற்றை புகட்டுவதாக கல்வித்திட்டம் மாற வேண்டும்.

❖ மனிதர்கள் விலங்குகளை விட அதிக ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயக் கட்டுப்பாடு என்ற சாட்டையால் மனிதன் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறான்.

❖ கற்புநெறியில் இருந்து பிறழும் போது, மனித சமூகம் முடிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

❖ நாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றி வாழ்வுக்கான இரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட துப்பாக்கி சுடுதல் போட்டியில் நெல்லியடி ம.ம.வி மாணவிகள் சாதனை




இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தேசிய மட்டதுப்பாக்கிச்சூட்டு போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரு மாணவிகள் சர்வதேச போட்டியில் இடம் பிடித்துள்ளனர்.

அண்மையில்கொழும்புபொரளை நாரந்தனைக் கவ்லூரியில் இடம் பெற்ற பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தேசிய மட்ட துப்பாக்கிச் சூட்டுப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சார்பாக பங்குபற்றிய ஸ்ரீசிதம்பரலிங்கம் தயானி , குமாரவேல் பிரதீபா ஆகிய இரு வீராங்கனைகளும் சர்வதேச போட்டிக்கும் தெரிவாகியுள்ளனர்.

சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான துப்பாக்கிச் சூட்டுப் போட்டிகள் எதிர்வரும் மேமாதம் ஜேர்மனியில் இடம்பெறவுள்ளது. இதில் பங்குபற்றவுள்ள தமிழ்வீராங்கனைகள் இருவரும் கரப்பந்தாட்டம், கிரிக்கெட்,தடகள, வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் மாகாணம், தேசிய மட்டங்களில் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-24)

# அமைச்சுக்கிடையிலான காற்பந்து; உட்கட்டமைப்பு அணி சம்பியன்



வட மாகாண அமைச்சுக்களின் அணிகளுக்கு இடையிலான காற்பந்தாட்ட போட்டியில் உட்கட்டமைப்பு அணி சம்பியனாகியுள்ளது.

வட மாகாண அமைச்சுக்களின் அணிகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டிகள் தற்போது யாழ்.மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது.

உள்ளகப் போட்டிகள், மைதான போட்டிகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய மேற்படி சுற்றுப் போட்டியில் காறபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த வியாழக்கிழமை முதல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வந்தன.

காறபந்தாட்ட போட்டிகளில் ஏழு அமைச்சுகளின் அணிகள் பங்குபற்றியதுடன் போட்டிகள் யாவும் விலகல் முறையில் நடைபெற்றன.

தொடர்ந்து இறுதிப் போட்டிக்கு உட்கட்டமைப்பு அணியும் பிரதிப் பிரதம செயலக கொத்தணி அணியும் மோதின. இதில் உட்கட்டமைப்பு அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில்

# 4 ஆயிரம் ஓட்டங்கள் கடந்து அம்லா புதிய சாதனை



டர்பனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 31 வயதான ஹஷிம அம்லா 100 ஓட்டங்களை குவித்தார். அவர் 59 ஓட்டங்களை எட்டிய போது சார்வதேச ஒருநாள் போட்டியில் 4 ஆயிரம் ஓட்டங்களை பெற்றார். இதுவரை 84 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள அம்லா அதில் 81 ஆவது இன்னிங்சில் களம் இறங்கி இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். இதன் மூலம் 42 ஆண்டுகால ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிவேகமாக 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற உலக சாதனையை படைத்தார்.

இதற்கு முன்பு மேற்கிந்திய ஜாம்பவான் விவியன் ரிச்சர்ட்ஸ் தனது 88 ஆவது இன்னிங்சில் 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்ததே உலக சாதனையாக இருந்தது. அவர் இச்சாதனையை 1985 ஆம் ஆண்டு படைத்திருந்தார்.

அவரது 28 ஆண்டு கால சாதனை இப்போது அம்லாவிடம் போய் சேர்ந்துள்ளது. அம்லா இதுவரை 84 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 12 சதம். 23 அரைசதம் உள்பட 4041 ஓட்டங்கள் (சுராசரி 53.88) சேர்த்துள்ளார். அத்துடன் வேகமாக 2 ஆயிரம் ஓட்டங்களை (40 இன்னிங்ஸ்) கடந்தவர. துரிதமாக 3 ஆயிரம் ஓட்டங்களை (57 இன்னிங்ஸ்) கடந்தவர் ஆகிய சாதனைகளும் அவரது வசமே இருக்கின்றன. 4 ஆயிரம் ஓட்டங்களை வேகமாக எடுத்தவர்களின சாதனை பட்டியலில் 3 ஆவது இடத்தில் இந்தியாவின் விராட் கோலி உள்ளார். அவர் தனது 93-வது இன்னிங்சில் 4 ஆயிரம் ஓட்டங்களை தாண்டியிருந்தார். இந்த போட்டியில் நிகழ்த்தப்பட்ட மேலும் சில சாதனைகள் விவரம் வருமாறு:- தென்ஆபிரிக்க வீரர 20 வயதான குயின்டான் டி காக் இந்த ஆட்டத்திலும் சதம் (106 ஓட்டம்) அடித்தார். ஏற்கனவே முதலாவது ஒரு நாள் போட்டியிலும் செஞ்சுரி (135ஓட்டம்) கண்டிருந்தார். இதன் மூலம் தொடர்ந்து இரு ஆட்டங்களில் சதம் விளாசிய 3 ஆவது தென்ஆபிரிக்க தொடக்க ஆட்டக்காரர் என்ற சிறப்பை டி காக் பெற்றுள்ளார்.

2002 இல் கிப்சும் (வங்காளதேசம். இந்தியா. கென்யாவுக்கு எதிராக தொடர்ந்து 3 சதம்) 2010 ஆம் ஆண்டில் அம்லாவும் (ஜிம்பாப்வேக்கு எதிராக தொடர்ந்து 2 சதம்) இதற்கு முன்பு அடுத்தடுத்து சதம் அடித்த தென்ஆபிரிக்க தொடக்க ஆட்டக்காரர்கள் ஆவர்.

இந்த ஆட்டத்தில் அம்லாவும். குயின்டான் டி காக்கும் முதல் விக்கெட்டுக்கு 194 ஓட்டங்கள் சேகரித்தனர். டர்பன் மைதானத்தில் தொடக்க ஜோடி சேர்த்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதற்கு முன்பு 2002 ஆம் ஆண்டு தென்ஆபிரிக்காவுக்கு எதிராக ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட்-மேத்யூ ஹைடன் இணை 170 ஓட்டங்கள் எடுத்ததே இந்த மைதானத்தில் முதல் விக்கெட்டுக்கு எடுக்கப்பட்ட சிறந்த ஸ்கோராக இருந்தது.

இந்த மோதலில் தென்ஆபிரிக்க தொடக்க வீரர்கள் டி காக். அம்லா இருவரும் சதத்தை பதிவு செய்தனர். ஒரு நாள் போட்டியில் தொடக்க வீரர்கள் ஒரே இன்னிங்சில் சதத்தை ருசிப்பது இது 27 ஆவது நிகழ்வாகும். அதே சமயம் தென் ஆபிரிக்க தரப்பில் தொடக்க ஜோடி சதம் காண்பது இது 2 ஆவது முறையாகும்.

இதற்கு முன்பு 2000 ஆம் ஆண்டு கொச்சியில் நடந்த இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் தென் ஆபிரிக்க தொடக்க ஆட்டக்காரர்கள் கேரி கிர்ஸ்டனும் (115 ஓட்டங்கள்). கிப்சும் (111 ஓட்டங்கள்) சதம் எடுத்திருந்தனர்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# அவுஸ்திரேலியாவிடம் மீண்டும் மண்டியிட்டது இங்கிலாந்து




அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 218 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படு தோல்வி அடைந்துள்ளது.

அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகள மோதிய அஷஸ் தொடரின் 2 ஆவது டெஸ்ட் அடிலெய்ட்டில் நடந்தது. அவுஸ்ரேலிய முதல் இன்னிங்சில் 9 விக்கெட் இழப்புக்கு 570 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 172 ஓட்டங்களில் சுருண்டது. பாலோ ஆன் கொடுககாமல் விளையாடிய அவுஸ்ரேலிய 2 ஆவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

531 ஓட்ட இலக்குடன் விளையாடிய இங்கிலாந்து 4 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 247 ஓட் டங்கள் எடுத்து இருந்தது. பிரையர் 31 ஓட்டங்களும். பிராட் 22 ஓட் டங்களும் எடுத்து ஆட்டம் இழக் காமல் இருந்தனர்.

நேற்று 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. தோல்வியை தவிர்க்க மேலும் 283 ஓட்டங்கள் தேவை கைவசம் 4 விக்கெட் என்ற நிலையில் இங்கிலாந்து தொடர்ந்து விளையாடியது.

அவுஸ்ரேலிய வீரர்களின அபாரமான பந்து வீச்சால் எஞ்சிய விக்கெட்டுகளும் சரிந்தன. இங்கிலாந்து அணி 101.4 ஓவரில் 312 ஓட்டங்களில் "ஆல் அவுட்" ஆகி 218 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படு தோல்வி அடைந்தது. ஏற்கனவே பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் இங்கிலாந்து 381 ஓட்ட வித்தியாசாத்தில் படு தோல்வி அடைந்து இருந்தது.


ஜோரூட் 87 ஓட்டங்களும், பிரையர் 69 ஓட்டங்களும் எடுத்தனர். பீட்டர் சிடில் 4 விக்கெட்டும். ஹாரிஸ் 3 விக்கெட்டும், ஜான்சன் தலா 1 விக்கெட் கைப்பற்றினார்கள். இந்த டெஸ்டில் 8 விக்கெட் சாய்த்த ஜான்சன் ஆட்டநாயகன் விருதை பெற்றார்.


இந்த வெற்றி மூலம் 5 டெஸ்ட் கொண்ட அஷஸ் தொடரில் அவுஸ்ரேலிய 2-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

இரு அணிகள் மோதும் 3 ஆவது டெஸ்ட் பெர்த் மைதானத்தில் எதிர்வரும் 13 ஆந் திகதி ஆரம்பமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானை வென்றது பாகிஸ்தான்






ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒற்றை இருபது - 20 சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

3 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டை இழந்த அவ்வணி, 2-வது விக்கெட்டை 7 ஓட்டங்களுக்கு இழந்தது. 4-வது விக்கெட்டுக்காக 35 ஓட்டங்களும், இறுதி நேரத்தில் பெறப்பட்ட சிறிய சிறிய இணைப்பாட்டங்களும் அவ்வணி 137 ஓட்டங்களைப்பெற உதவின.

துடுப்பாட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி சார்பாக நஜிபுல்லா சத்ரன் 30 பந்துகளில் 38 ஓட்டங்களையும், மிர்வய்ஸ் அஷ்ரப் 22 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக யுனைட் கான் 4 ஓவர்களில் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சொஹைல் தன்வீர் 4 ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சுல்பிகர் பாபர், பிலாவல் பற்றி, ஷகிட் அப்ரிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். தவிர, மொஹமட் ஹபீஸ் 4 ஓவர்களில் 13 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்தார்.

138 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 49 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, தொடர்ந்தும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆனால் இறுதி நேரத்தில் ஓட்டங்களைப் பெறத் தடுமாறிய அவ்வணி, இறுதி 8 பந்துகளில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், இறுதி ஓவரின் 5வது பந்தில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 37 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும், அஹமட் ஷெஷாத் 37 பந்துகளில் 35 ஓட்டங்களையும், உமர் அக்மல் 23 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் அணி சார்பாக மொஹமட் நபி, தவ்லட் சட்ரன், சமியுல்லா ஷென்வரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணியின் தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவானார்.

## ஜூனியர் உலக கோப்பை ஹாக்கி

## கொரியா - இந்தியா இன்று மோதல்

ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கி போட்டிகள் டெல்லியில் நடைபெற்று வருகின்றன. இதில், சி





பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, முதல் லீக் போட்டியில் நெதர்லாந்து அணியிடம் 3-2 என்ற கோல்கணக்கில் தோல்வியடைந்தது. அதன்பின்னர் எழுச்சியுடன் களமிறங்கிய இந்திய வீரர்கள், 2-வது லீக் ஆட்டத்தில் கனடாவை 3-2 என்ற கோல் கணக்கில் போராடி வென்றது.

சி பிரிவில் இரண்டு வெற்றிகளைப் பதிவு செய்த நெதர்லாந்து அணி ஏற்கெனவே காலிறுதிக்கு தகுதி பெற்றுவிட்டது. கொரியாவும், இந்தியாவும் தலா 3 புள்ளிகள் பெற்றுள்ள போதிலும், கோல்கள் அடிப்படையில் கொரியா முன்னிலையில் உள்ளது. எனவே, இந்திய அணி இன்று விளையாட உள்ள கடைசி லீக் போட்டியில் கொரிய அணியை வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

டிரா செய்தாலோ, தோல்வியடைந்தாலோ போட்டியில் இருந்து வெளியேற்றப்படும். கொரிய அணியைப் பொறுத்தவரை, டிரா செய்தாலே காலிறுதிக்கு தகுதி பெற்றுவிடும். எனவே, இன்றைய ஆட்டத்தில் இந்தியாவுக்கு கடும் சவால் விடும் வகையில் அவர்களின் ஆட்டம் இருக்கும்.

கனடாவுக்கு எதிரான போட்டியில் சிறப்பாக விளையாடியது போன்று, கடைசி போட்டியிலும் சிறப்பாக விளையாடுவார்கள் என்று பயிற்சியாளர் கிளார்க் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# இந்திய கிரிக்கெட் ஸ்பான்சர்ஷிப் ஸ்ரார் நிறுவனம் கைப்பற்றியது



சென்னையில் நேற்று நடைபெற்ற பிசிசிஐ யின் மார்க்கெட்டிங் கமிட்டி கூட்டத்திற்குப்பின், இந்திய கிரிக்கெட் அணியின மூன்று வருட ஸ்பான்சர்ஷிப் உரிமையை ஸ்டார் பிரைவேட் லிமிட்டெட் பெற்றது. இதன்படி, இருநாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் ஒரு போட்டிக்கு ரூ.1.92 கோடியும், ஐ.சி.சி. நடத்தும் போட்டிகளுக்கு தலா ரூ.61 லட்சமும் ஸ்டார் நிறுவனம் செலுத்தும்.

இந்த உரிமம் வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியில் இருந்து 2017 ஆம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி வரை நடைபெறும் அனைத்து பிசிசிஐ, ஐசிசி மற்றும் ஏசிசி போட்டிகள், வர்த்தக ஒளி மற்றும் ஒலிபரப்புகளுக்கும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளதாக பிசிசிஐ செயலாளர் சஞ்சய் பட்டேல் கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிகாரப்பூர்வ ஸ்பான்சர்கள் என்று அழைக்கப்படும் உரிமை இவர்களுக்கு வழங்கப்படும். மேலும், சீனியர் ஆண்கள் அணி, ஆண்கள் ஏ-பிரிவு அணி, 19 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் அணி மற்றும் பெண்கள் அணியினருக்கான சீருடையில் இவர்கள் தங்களின் வர்த்தக முத்திரையை பதித்துக் கொள்ளலாம் என்றும் சஞ்சய் பட்டேல் தெரிவித்தார்.

இந்த ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் தேதியிலிருந்து ஏலத்திற்கான டெண்டர்கள் பெறப்பட்டன. நேற்று மதியம் மூன்று மணிக்கு டெண்டர்கள் பெறுவது நிறுத்தப்பட்டு பிரிக்கப்பட்ட டெண்டர்கள் மதிப்பிடப்பட்டன. நிர்வாகம் மொத்தமாகப் பெற்ற ஏழு டெண்டர்களில் இரண்டு இறுதிக்கட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டது. அவற்றில் ஒன்றான சஹாரா நிறுவனத்தினரின் டெண்டர் தகுதியற்றதாகத் தெரிவிக்கப்பட்டு ஸ்டார் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதுநாள்வரை இந்தியக் கிரிக்கெட அணியின் வர்த்தக உரிமையாளர்களாக இருந்து வந்த சஹாரா நிறுவனம் ஐபிஎல் உரிமம் பெறுவது குறித்து நிர்வாகத்துடன் ஏற்பட்ட சர்ச்சையால் இந்த மாதம விலகிக் கொள்வதாக அறிவித்திருந்தது.

இதனைக் காரணமாகக் கொண்டே தங்களுக்குப் புதிய உரிமம் வழங்கப்படவில்லை என்று அந்நிறுவனம் குறை கூறியுள்ளது. தகுதியில்லை என்று ஆரம்பக் கட்டத்திலேயே விலக்காமல் இறுதிக் கட்டத்தில் முடிவெடுத்தது குறித்தும் அந்நிறுவனம் கேள்வி எழுப்பியுள்ளது.

சஹாரா நிறுவனமே உயர்ந்தபட்ச ஏலத்தொகை கேட்டிருந்தது. அதாவது இருதரப்பு போட்டிகளுக்கு தலா ரூ.2.03 கோடியும், ஐ.சி.சி. போட்டிகளுக்கு தலா ரூ.91 லட்சமும் ஏலம் கேட்டிருந்தது. எனினும் அந்த ஏல விண்ணப்பம் தகுதியற்றதாக கூறி நிராகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




சிதம்பர தரிசனம்

சிதம்பரத்தில் அருள்வாய் சிவனே

கோவை தந்த வாசகர்க்குக்
குருந்தின் அடியிற் குருவாகிச்
சாவை யறுக்கும் பேரின்ப
சாரம் பொழிந்த தனிமுகிலே
நாவை அசைத்துன் புகழ்பாட
நயந்து வியந்துன் அடி அடைந்தேன்
தேவை அறிந்து வரம் அருளும்
தேவ தேவே சிதம்பரத்தில் அருள்வாய்

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.

(இன்று (10/12/2013) ஈழத்துச் சிதம்பரத்தில் 2 நாள் திருவெம்பாவை)

(சி-5728)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமர்வில்...

வடக்குமாகாணத்தின் குடிப்பரம்பலை மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்ட வகையில் மேற்கொண்டு வருகின்ற குடியேற்றங்களைக் கண்டித்தும் இத்தகைய செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்த வேண்டும் எனக் கோரியுமே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாக மாகாண சபையின் யாழ்.மாவட்ட உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது பேரவையின் மூன்றாவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள மாகாண சபைக் கட்டிடத்தில் இன்று காலை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போதே மேற்படித் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது.

போரின் காரணமாக சொந்த இடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட தமிழ்மக்கள் மீண்டும் அதேயிடங்களில மீள்குடியேற்றப்பட வேண்டுமென்றும் குறிப்பாக நீண்ட காலமாக இடம்பெயர்ந்திருக்கின்ற வலிகாமம் வடக்கு மக்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு வலி. வடக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள பொது மக்களுடைய வீடுகள் மற்றும் பாடசாலைகள் மற்றும் ஆலயங்கள் என்பவை இடித்தழிக்கப்படுவது மற்றும் மாகாணத்திலுள்ள அரச காணிகளில் வெளிமாவட்டத்தைச்சேர்ந்தவர்கள் குறிப்பாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை பலவந்தமாக இங்கு குடியேற்றுவது என்பவை நிறுத்தப் பட வேண்டுமெனக் கோரியே விசேட பிரேரணை கொணடுவரப் படவுள்ளது.

இவ்வாறு இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் அழிப்புக்கள் தொடர்பிலும் மாகாணத்தில் குடிப்பரம்பலை மாற்றும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் கண்டிக்கத்தக்கது. இந்நிலையில்இதனை நிறுத்தக் கோரியுமே மேற்படி பிரேரணை கொணடு வரப்படவுள்ளதாகவும் இதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபையின் கடந்த அமர்வில் வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இராணுவத்தனரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடழிப்பு மற்றும் தமிழ் மக்களின் காணி சுவீகரிப்பு தொடர்பில்கண்டனத்தீர்மானம்கொண்டு வரப்படாதற்கு பொது மக்கள்கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# உருத்திர...

மையினையும்அனைத்துலகிற்கு எடுத்தியம்பி, அதனடிப்படையில் அனைத்துலகத்தின் அனுசரணையுடன் சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

அந்தவேளையிலே தேசியத் தலைவரது நம்பிக்கைக்கு ஒருவனாகஅதில்பணியாற்றும் பேறு எனக்கு கிடைத்தது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளை அந்த செயற்பாட்டின் ஓர் தொடர்ச்சியாகவே நான் பார்க்கன்றேன் அந்தப்பணி முடியும் வரை அந்த இலட்சியம் அடையும் வரைஓய்போவதில்லை என முரசறைந்தார்.

தற்போது அமெரிக்காவினை வாழ்விடமாக கொண்டுள்ள விசுவநாதன் உருத்தரகுமாரன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராஜதந்திர அரசியற் செயற்பாட்டுக்களத்தில் பெருமபங்காற்றிவருகின்றவர்.

அனைத்துலகசட்டவல்லுனராக விளங்கும்இவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகராகவும், 2002ம் ஆண்டுக் காலப்பகுதியின் சமாதானப்பேச்சுவாரத்தையில்தமிழீழ தரப்பு பிரதிநிதிகளில் ஒருவராக பங்கெடுத்தவர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உருவாக்கத்தில்பங்கெடுத்து, அதன் முதற்தவணை அரசவையின் பிரதமராக திகழ்ந்திருந்தவர். தற்போது இவர் மீண்டும் பிரதமராக தேர்வுசெய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)

# தமிழர்...

வலியுறுத்தி பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது. அத்தோடு வலிவடக்கு உயர்பாதுகாப்புவலயத்திற்குள் அண்மையில செல்லமுற்பட்ட முதலமைச்சரை இராணுவத்தினர் திருப்பியனுப்பியமை இங்கு இராணுவ ஆட்சியே இடம பெறுகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

எனவே ஆளுநரும் இராணுவம் சார்ந்த ஒருவராகஇருப்பது சிவில்நிர்வாகத்திற்கு தடையாகவுள்ளது இதனால்அவரை உடனடியாக மாற்றுவதோடு வடக்குமாகாணத்தை சேர்ந்த தமிழர ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படவேண்டும். அதுவும் முதலமைச்சரின் ஆலோசனையுடன்தான் ஜனாதிபதி ஆளுநரை நியமிக்கவேண்டும்எனவலியுறுத்தி இந்தத்தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது.

இதனைவிட மீள்குடியேற்றம்இராணுவக்காணி சுவிகரிப்பு, சட்டவிரோத மணல்அகழ்வு, தொண்டர ஆசிரியர் நியமனம் உள்ளிட்ட 8 பிரேரணைகள் இன்றுநடைபெறும்மாகாண சபையின் அமர்வில் நிறைவேற்றப்படவுள்ளன. (செ-6)

# குடைசாய்ந்து பேருந்து விப...

இச்சம்பவத்தை நேரில் கண்டவர்கள கருத்துத் தெரிவிக்கையில்,

மிகவும்வேகமாக வந்த மேற்படி பேருந்து எதிரே வந்த வாகனமொன்றிற்கு இடம் வழங்கமுற்பட்டபோது வேகத்தை கட்டுப்படுத்த முடியாது அருகில் இருந்த பள்ளத்தில் இருமுறை தலைகழாக சுழன்று கவிழ்ந்தது.

இதனையடுத்து அதனுள் பயணித்த அனைவரும் கூக்குரல இடவே அப்பகுதியிலிருந்த அனைவரும் ஓடிச்சென்று பேருந்தில் இருந்த பயணிகளை இழுத்தும் வெளியேற்றியும் வந்தவாகனங்களில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத் தோம் எனத் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வாகனச் சாரதி மாங்குள பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

(செ-9,15, 259, 266)

# தென்னாபிரிக்காவுக்கு...

அஞ்சலி செலுத்தும் நோக்கில்உலகின்பல வேறுநாடுகளின்தலைவர்களும் தென்னாபிரிக்கா பயணிக்கத தயாராகி வருகினறனர். இந்நிலையில் நான்குநாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு செல்லும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்கா பயணத்தின் பின்னர் அங்கிருந்தவாறு கென்யாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கென்யா செல்லும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த நாட்டின்ஜனாதிபதி உகுருகொன்யாடா வை சந்தித்துப் பேசவுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய அரசதலைவர்கள் மாநாட்டில் கென்ய ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை. அந்த நாட்டின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் கலந்து கொண்டிருந்தார். (செ-11)

# வடக்கின் முதலா...

செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான மாகாண நிதி நியதிச் சட்டவரைவுஆவணங்களைவடக்குமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கையொப்பமிட்டு முதலமச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடாக சுமார் 19 ஆயிரத்து 481 மில்லியன் ரூபாய் நிதியை மத்திய அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது எனபது குறிப்பிடத்தக்கது. அத்தோடு மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட நிதி போதுமானதாக இல்லையென முதலமைச்சர் கடந்த கூட்டத்தில் வரவு செலவுத்திட்ட முன்வரவை சமர்ப்பித்து உரையாற்றும போது தெரிவித்திருந்தார். (செ-6)

# அகாஷி - மகிந்த முக்கிய...

இடம்பெற்றுள்ளது.

அலரிமாளிகையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க - ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், நல்லிணக்க செயல்முறை, இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவுகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் மட்டுப்படுத்திய வளங்களுடன் ஒப்பிடுகையில் யுத்தத்திற்கு பின்னர் இலங்கை அடைந்துள்ள அபிவிருத்தி அதிசயமானது என்று யசூசி அகாஷி இதன்போது கூறியிருந்தார்என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபிஹிட்டோ ஹோரயோ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம, ஜப்பானுக்கான இலங்கை தூதுவர்வசந்தகருணாகொட ஆகியோரும் கலந்துகொணடனர்.

ஐந்து நாட்கள் பயணத்தை மேற்கொண்டு கடந்த 8 ஆம் திகதி இலங்கைக்கு வந்திருநத அவர் எதிர்வரும் 13 ஆம்திகதிவரையிலும் இங்கு தங்கியிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

# மனிதவுரிமைகள்...

இடம்பெயர்ந்த தமிழ மக்கள் அவர்களது சொந்த இடங்களில் உடனடியாக மீளக் குடியமர்த்தப்படல் வேண்டும் உள்ளிட்ட பலவிடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள்முன்னணிமற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்ட ஒன்று கூடல் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல. 43, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத் தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி ஒன்று கூடல் நிகழ்வின் முடிவில்காணாமல்போனவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல்' சிறையிலுள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை, இடம் பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் உடனடியாக மீளக் குடியமர்த்தப்படல் ஆகியன உட்பட பல கோரிக்கைகள் உள்ளடக்கிய மனு ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் அறிவித்துள்ளார். (செ-6)


## தேவை
## Trainee Accountant

A/L கணக்கியலுடன் 3 பாடங்கள. நாளாந்த படியாக ரூபாய் 150 உணவு உட்பட. அனுபவம் உடையோருக்கு தகுந்த கூடுதலான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:- mrandco2011@yahoo.com
140, பலாலி T.P: 0779530496
வீதி, திருநெல்வேலி, பரமேஸ்வராச்சந்தி.
(பெற்றோல் செற் முன்பாக) (4811)

## Europe Work Permit for IT Diploma / Degree Holders
Korean Visit / Work visa
100% ஆலோசனை வழங்கப்படும்
iCS Migration Services
No 77, Clock Tower Road, Jaffna.
021-7306000 , 076-690 3575 (சி-5732)

## பணிநிலை வெற்றிடங்கள்

புததகம், ஸ்ரேசனரிப் பொருட்கள் வியாபாரத்தில அனுபவமுடைய விற்பனையாளர்கள் தேவை.

- வேலை பழக ஆர்வமுடையோரும் விரும்பப்படுவர்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆர்வமுடையோர் உடன் நேரில் வரவும். (சி-5730)

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்

வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிறி. G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுதிகதி 12 Dec
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு: Type <BIT><your name> & send to 772395895

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் O/L தகைமையுடன் இருப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். சந்தைப்படுத்தல் (Marketing Executive) துறையில் ஆர்வம் உடையவர்கள் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

- அடிப்படைச் சம்பளம் 15,000 - 25,000 /-
- தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்
- வயதெல்லை 18 - 35
- வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் உண்டு
- குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலம் சுபீட்சமாகும். (20 பேர் மட்டும்)

தொடர்புகளுக்கு :- 0777 981 471, 077 556 6226 (4813)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA
*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



**யார் AF இல் French படிக்க முடியும்?**
திருமணம் மூலம் France, Canada... செல்வோர்,. வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர்... இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.

- Videos for listening & speaking practice : "Bienvenue en France" Episode N°. 1,2,3,4...
- Teaching materials are given with free of charge. (ஆங்கில அறிவு அவசியமில்லை)
- Elementary level - 1 (6 Months, 100 Hours, CERTIFICATE course)
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (Free)
- Translations in French : பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள். மேலும் நூலக வசதி...

Just say "Yes, I can... speak French"
AF is the only International Organization for French in Northern Province

**கவனிக்கவும்:**
DELF A1 பரீட்சை : 14.12.2013 பரீட்சைக்கு தோற்றுவோர் AF ஊடாக விண்ணப்பிக்கலாம்.
பரீட்சை கட்டணம் : 3000 Rs. (AF மாணவர்களுக்கு) 8500 Rs. (ஏனையோருக்கு). இப்பரீட்சையை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான "தயார்ப்படுத்தல் வகுப்பு" சனி, ஞாயிறு at 8.30 am

**புதிய வகுப்பு விரைவில் ... உடன் பதிவு செய்யவும்.**

61 Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 / நேரிலும் வரலாம்
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்) (4810)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.